அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

~Page-NO-261-

மலர் 4
இதழ் 6
விலை அ.4.

நந்தன ஷு புரட்டாசி மீ
செப்டம்பர்—அக்டோபர்—1952

ACC. NO. 18581.

வருட
சந்தா
ரூ. 2-4-0

தவம் செய்யும் உமாதேவியாரை சிவபெருமான் தன்னுடன் கைலாயம் சேர ரிஷபத்திலேற அழைத்தல்
(கந்தபுராணச் சித்திர விளக்கம்—40)

262

பொருளடக்கம்

				பக்கம்
1.	ராமரஸம்	(திருப்புகழ்மணி)	...	241
2.	அதிசயம் அநேகமுற்ற பழனி	(சே. த. இராமலிங்கம் பிள்ளை)	...	245
3.	கதிர்காம யாத்திரை	(கி. வா. ஜகந்நாதன்)	...	250
4.	வேல்வரும் தமிழும்	(ஸ்ரீ வத்ஸன்)	...	253
5.	வேலாயுத மூப்பனார்	(ரசபதி)	...	262
6.	எங்கே காணலாம்	(K. S. சுந்தரமூர்த்தி)	...	274
7.	பக்தியும் இசையும்	(கீழ்வேளூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை)	...	281
8.	Memory and Intuition	(Thiruppugal Mani)	...	286

கர வருஷ பன்னிரண்டு இதழ்களும் பயிண்டு செய்யப்பட்டது ரூ. 3—6—0. தபால் செலவு அணு 6. வேண்டுவோர்கள் ரூ. 3—12—0 அனுப்பவும் வி. பி. இல்லை.

'அமிர்தவசனி'யின் முன்னேற்றத்தைக் கருதி ரூ. 50—0—0 நன்கொடையாக உதவும் அன்பார்ந்த நேயர்களுக்கு ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்பெறும்.

அமிர்தவசனி சந்தா அறிக்கை

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா இலங்கை உள்பட உள்நாட்டிற்கு ரூ. 2—4—0 நான்கு வருட சந்தா ரூ. 8—4—0 அயல் நாடுகளுக்கு வருட சந்தா ரூ 3—0—0 4 வருட சந்தா ரூ. 11—0—0.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

For **PAPERS** INDIAN & FOREIGN

NEWSPRINT — CREAMLAID — PRINTING BOND — TISSUE — BUTTER — POSTER — ART KRAFT — BOARDS, ETC., ETC.,

Deccan Blue Match, Tea wrapper, & Duplicating paper available any quantity

P. S. N. M. Ramalingam Chettiar & Co.

46, ANDERSON STREET, MADRAS 1

PHONE: 85004 - POST BOX 1563 - GRAMS: "DRAWING"

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ௵ புரட்டாசி மீ செப்டம்பர்—அக்டோபர் 1952	இதழ் 6

ராமரஸம்

திருப்புகழ் மணி

பகுதி—(11)

திருப்புகழ் அமிர்தத்தில் ராமாம்ருதம் கலந்திருக்கின்றதாம். எங்கும் நிறைந்த கடவுளை முருகனாய் வாய்விட்டலறி அநுபூதி எய்திய ஸ்ரீ அருணகிரியார், ராமாயண பாரத ஸ்கந்தாதி புராணங்களிலே காணப் படுகின்ற ரஸங்களை யெல்லாம் தெய்வீக சமத்வ சமரஸமாய் உணர்ந்து, திருப்புகழில் சமரஸ தத்துவத்தை மற்றைய புராணங்கள்போல், இடைவிடாது போதித்து வருகின்றார். ஆயினும், மிகச் சிறந்த வகையில் வால்மீகி மஹரிஷி, ஜனன மரண துக்க சாகரத்தை கடக்கும் வகையைத்தான் ராமா

ஈனந் தருமுடலம் என்னதுயான் என்பதற
ஆனந்தம் வேண்டி அலைந்தேன் பராபரமே.

யணத்தில் போதிக்கின்றார். பஞ்சேந்திரியங்களின் வழியாக வெளியில் சென்று, அவா எனப்பெறும் ஆசை கொண்டு, வினைத் தொகுதியைச் சேர்த்து, ப்ராரப்தம் என்னும் ஊழ்வினை காரணமாகப் பிறப்பெடுத்து, பேத சம்சார சாகரத்தில் விருப்பும் வெறுப்பும் கொண்டு, துன்பத்தைப் பயிராக்கித் துடித்திடும் ஜன்மாக்களை ஈடேற்றும் வழியை ராமாயணத்தில் போதிக்கின்றார். அந்த உபதேச ரஸம் நிரம்பி நிற்கின்றது திருப்புகழில். கொடூரம், குரோதம், காமம், பாசம் முதலியன, எவ்விதம் ஊழ்வினையாய் மூள்கின்றதென்றும், ஆண்டவன் நாம அநுபூதியால் எப்படி மறைகின்றதென்றும் ஆங்காங்கே காட்டப்படுகின்றது. ராம நாமம் ஓர் சப்தப்ரம்மம். ப்ரம்மம் எனும் கடவுள் பஞ்சபூதங்களில் உறைவதால், பஞ்சேந்திரியங்களால் ப்ரம்மத்தை அனுபவிக்க முடியும்: அப்படி அனுபவிப்பது பக்தி மார்க்கம். கடவுளை மறந்து அனுபவிப்பது எல்லாம் விஷம் வினை. நோன்பினில் பெரிய நோன்பு தெய்வத்தின் இடைவிடாத நினைவு.இதுதான் கற்பிற் சிறந்தகற்பு.

பரதன் கண்ணும்கண்ணீருமாக குடிகள் சமூகத்துடன் ஸ்ரீ ராமனை கானகத்திற்கு செல்லவிடாது, ராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்க வருவதைப் பார்த்து, சினந்து ,கோபமெனும் மாயையாலும், பாசமெனும் மாயையாலும் மூடப்பட்டவனாய், பரதனையும் அவன் உடன்வரும் பக்தர்களையும் நிந்தித்து, ராமனிடம்

என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்துகரைந்து
அன்புருவாய் நிற்க அமைந்தேன் பராபரமே.

சென்று, அவர்களை அழித்து விடுகின்றேன் என்று சொன்னான் லக்ஷ்மணன். சாந்த மூர்த்தி யாகிய ராமர் அவனைக் கண்டித்து, விதியின் பிழை யறியாது ஏன் இந்தக் கோபம் என்றார். பரம பக்தனை பரதனை நிந்தித்த கொடூரம், மேலே லக்ஷ்மணனிடம் மூண்டுவிட்டது ப்ராரப்தம்தான். மாரீசன் என்ற அசுரன் பொன் மானாய் வந்து விளையாட, அதன் மேல் ஆசை பாய்ந்து, அதைப் பிடித்துவர ராமனை அனுப்பிய சீதை, ஹே சீதா, ஹே லக்ஷ்மணா என்று மடிந்த மாரீசன் குரலை அறியாது, ராமனுக்கு ஆபத்து வந்துவிட்டது என்று நினைத்தாள். லக்ஷ்மணன் சொல்லியும் கேட்கவில்லை. ராமன் ஆணையை மீறி, லக்ஷ்மணனை உடனே ராமனைத் தேடிப் போய் வரவேண்டு மென்றாள். லக்ஷ்மணன் அசுரர் இருக்கும் காட்டில் தனியே சீதையை விட்டுப் போனால், ராமன் ஆணையை நிராஹரித்ததாகும் என்று சொல்ல, ராமன் இறந்தால் நீ என்னை யடைந்து சுகிக்கலா மென்ற எண்ணம் கொண்டாயோ என்றெல்லாம் சொல்லி லக்ஷ்மணனை ஏசினாள். என்ன பாவம்! இந்த ப்ராரப்தம் இத்துடன் விடவில்லை. சீதை, ராவண வதமான பின்னர், ராமனிடம் வந்தவுடன், ராமன் சொன்னது யாது? சீதா! என் மானத்தை காப்பாற்றிக் கொள்ள, ராவண வதத்தை முடித்துவிட்டேன். உன்னைச் சிறையி லிருந்து மீட்டு விட்டேன். இனி நீ எங்கு போனாலும் போகலாம். என்னிடம் உனக்கு இடமில்லை யென்றார். ஆ!

---

* சுத்த அறிவாய்ச், சுகம்பொருந்தின் அல்லால் என்
சித்தந் தெளியாதென் செய்வேன் பராபரமே.

என்ன கொடூரமான வாக்கு. இவையும் முன்வினை. இவை யெல்லாம் ஒழிந்து, மீண்டு பட்டாபிஷேகம் செய்துகொள்ளும் நிலை எப்படித்தான் எய்தியது! எல்லாம் ராமநாம ஜபத்தின் பயன்தான்.

சோக வனத்தை அசோக வனமாக்கியது ராம நாம ஜபம்தான். கொடூர ஸ்வரூபிகளான அசுரர் நகரத்தை கொளுத்தி சாம்பலாகச் செய்தது ஆஞ்ச நேயர் வாலில் இட்ட தீ. அந்த தீ ஆஞ்சநேயரைச் சுடவில்லை. சீதையையும் நெருப்பு சுடவில்லை. இது 'ராம' நாம மகிமை. பக்தியின் சிறப்பு. குரங்கின் வடிவம் பெற்றால் என்ன? மனம் குரங்காய் இல்லா விடின் சபல புத்தியை விட்டு அசஞ்சல பக்தியில் நின்றுவிட்டால், குரங்காய்ப் பிறந்திடினும் தேவனும் வாழலாம் அல்லவா? ப்ராரப்த கர்மத்தால் கல்லாய் சபிக்கப் பெற்ற அகல்யா, ராமநாமத்தால் சாபம் நீங்கி துல்யமான பெண்ணாய் மாறிவிட்டாள். ஜாதி யில் இழிந்தவள் என்று கருதப்படும் சபரி, ராம தரி சனம் கண்டு மோக்ஷம் அடைந்தாள்.

கல்லை யெல்லாம் பொன்னாக்கும் வித்தையை கற்பிக்கின்றார் அருணகிரியார். பொன்னை உரைகல் மீது தேய்த்தால், பொன்னின் மாற்று தெரியவரும். உரைகல் பொன்னாவதில்லை. ஆனால் மனமெனும் கல் லின்மேல் முருகா, ராமா, சிவா, க்ருஷ்ணா எனும் நாமங்களைத் தேய்த்தால், மனக்கல் பொன்னாய் மாறி விடும். பொன்னே மணியே என்றெல்லாம் முருக னையும் கண்ணனையும் கூறுகின்றார். இக்தப் பொன்

மாசு அநுபூதி வாய்க்கின் அல்லால் என்மயக்கத்
தேறுதேன் செய்வேன் சிவமே பராபரமே.

ணின் குணம், தான் சார்ந்த இடமெல்லாம் பொன்ணாக்கி விடுகின்றது. அதுபோல், ராமநாம ஜபம் உலகெலாம் ராமனாக்கி விடுமாம். இந்த ராமாயண ரஸம் பொருந்தியது திருப்புகழ்; 'பத்துத்தலை தத்தக் கணைதொடு பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள் பக்ஷத்தொடு ரக்ஷித்தருள்வது ஒரு நாளே' என்ற பாடலைப் பாருங்கள். "நானதேது நீயதேது நடுவில் நின்றதேதடா! கோனதேது குருவதேது கூறிடும் குலாமரே! ஆனதேது அழிவதேது அப்புறத்துக் கப்புறம்! ஈனமேது இழிவதேது ராமவென்னும் நாமமே."

அதிசயம் அநேகமுற்ற பழநி (10)

திருப்புகழ் சதுரர் சே. ந. இராமலிங்கம் பிள்ளை B. A., B. T.,

(221 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படியேறும் பண்பு

கந்தா விளக்கனைய நம் பழநி நாயகனைச், சிந்தாகுலர் தீரத் தீந்தமிழால் பல பாடி, "தண்டாயுதபாணி! ஹர ஓம் ஹர" என்று பாற்காவடி கொண்டு பாலர் முதல் பாவலர்களும் மலை மேல் படி யேறும் மாண்பதனை யாவர் சொல்வார்?

மலைத்தலம் பலவற்றுள்ளும், மயிலோன் திருவடிக்கே வைத்த சிந்தையின்றியே மலை யேறுவார்க்கு வருத்தத்தை யுண்டு பண்ணும் மறக் கருணை வாய்ந்த தலங்களில் ஒன்று

சொல்லால் அடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கின்
அல்லால் என்தாகம் அறுமோ பராபரமே.

பழநி என்னலாம். மலை யேறும் மக்கள், பல் வேறு இயற்கையர். ஆண்டவன் அருள் தரிசனத்திற்காக அங்குச் செல்வாரும், மலை வளங் கண்டு மகிழச் செல்வாரும், புது ஊர் பார்த்தலே புனிதத் தொண்டு என்று ஊர் சுற்றி உளங் களிக்க வருவாரும் உளர். ஆனால் காவடியைத் தோளில் தூக்கி வைத்து விட்டால் சிற்றடி யுடைய சிறு குழந்தையானாலும், முற்றிய வயதுடைய மூதாட்டியானாலும், காவடி யிட்டுக் கறங்கெனச் சுற்றிக் கடிதினில் மலையேறும் காட்சி, கடவுள் நினைவில்லாத கயவர்கட்கும் மயிர்க் கூச்செறியச் செய்யும் என்பது வாய்மையாகும்.

மலைப்படி மகத்துவம்

மலையுச்சி, தத்துவங்களின் முடிவு என்றும், படிகள் அனைத்தும் சாத்விகத் தனிப் பெரும் பயனை அடையும்படி ஆன்மாக்களுக்கு ஆன்றோர் வகுத்த படிகள் (பல்வேறு நிலையுள்ள வழிகள்) என்றும் கூறுவர். திண்ணப்பர் என்ற கண்ணப்பர், மாகமார் திருக்காளத்தி மலையிடை கிடைத்த மரகத மணியான காளத்தி யப்பரைக் காணப் படியேறினர் என்று சொல்ல வந்த தெய்வச் சேக்கிழார் பெருமான், "பேணு தத்துவங்கள் என்னும் பெரிய சோபானம் எறி" (சோபானம்-படி) எனத் தத்துவங்களையே கடந்து சென்றார் என்று குறிப்பது காண்க. பெரும்பாலும் மலைக் கோயில்களில் இத்தகைய தத்துவ நுட்பங்கள் பலவற்றை ஆன்றோர் அமைத்துள்ளமை அறிய வேண்டுவது நமது கடமையாகும். இது போலவே

பாராயோ என்னைமுகம் பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.

திருப்புகழோதும் கருத்தினர் சேரும் திருத்தணி மாமலையைத், தினமும் தரிசிக்க இயலாதாரும், "ஆண்டிற்கொரு நாளில்" படி மீது திருப்புகழ் பாடித் தணிகை நாயகனைச் சார்ந்து அன்பு செய்தால் (ஓராண்டு முழுவதும்) 365 நாட்களும் தரிசித்த பலன் பெற்றவர் என்று குறிக்கவே 365 படிகள் அம்மலைக்கிருக்கின்றன என்ற செய்தியை அன்பர்கள் சிந்திப்பார்களாக.

குன்றுலாவும் குரங்குகள் :

அகமுக நாட்ட அநுபவ முடையார், கலகநிலைமிகவுடைய உலக நிலை விலகி வரும், சிவயோக சாதனையின் ஒழுகுங்காலை, சித்தம் ஒருக்கிச் செவ்வேளின் திருவடியைச் சிந்திக்க முயலுவர். அப்போது தாந்தாமுன் செய்த கன்ம வினை இடை மறித்து அதனைக் கலைப்பதை அனைவரும் அறிவர்.

"பாழ்த்த கன்மங்கள் போராடுதே" என்று அலறும் தாயுமானாரது பரிதாபக் குரலும் ஈண்டு நினைக்கத் தகும். இவ்வகமுகக் காட்சியைப் புறமுகத்தில் புலப்படுத்துவது போல, மலைமேல் தண்டபாணியைத் தரிசிக்க வருவோரைக் கூட்டங் கூட்டமாய்க் குரங்குகள் வழி மறிக்கும்.

கோல் கண்டு குரங்கடங்கும்

ஆனால், கையில் கோல் கொண்டு செல்வாரையும், அவை உண்ணத்தக்க கனியும் பொரியும் தருவாரையும் அவை ஒன்றும் செய்வதில்லை. இக் காட்சியின் தத்துவம், கன்மப் போராட்டத்தை வெல்லுவோர் குரு காட்ட பொறித்து

ஓயாதோ என்கவலை உள்ளேஆ னந்தவெள்ளம்
பாயாதோ ஐயா பகராய் பராபரமே.

வெள்ளையாகும் அரிசிப் பொறி போலத், தியானக் கனலில் பொரிந்து கள்ளமற வெளுத்த உள்ளமும், இறைவன் திருநாம ஜெபம் என்ற கோலும் கொண்டு நாமே நடக்க வேண்டும். இந்தச் செபமாகும் கோலே* திருவருளரசாட்சிக்குரிய செங்கோல் ஆகும். இக் கருத்தை புணர்ந்த வந்த பாம்பனடிகள் கூறும் அழகினைப் பாருங்கள்.

முருகன் பிரணவத் தெய்வம். அவனை வழிபடும் நாம் அனைவரும் பிரணவச் சைவ பாரம்பரையின ராவோம். முருகனது திருவரு ளரசாட்சி செய்வோர்க்கு சூர் முதல் தடிந்தோன் தூயதாள் அன்பே அரியாசனம்; வாழ்த்தும் (அடியார் குழாங்களே) அரசாங்க அவைக் களத்தவர்; செபமே செங்கோல்; திருவடித் தியானமே கிரீடம்; கந்த வேளுலகமே சொந்தமான நாடு.

"வெய்யசூர் இரித்தோன் பத்தி என்னும் விட்டரத்தில் வைகி
பொய்யிலா வாழ்த்தாம் ஈட்டம் புடையுறச் செபிக்கும் நாமச்
செய்ய கோலேந்திப் பாதத் தியான நன் மௌலி தாங்கி
உய்யுமே இன்னல் வைப்பாம் ஓம் சைவ சமயானந்தம்"

(செக்கர்வேளிருமாப்பு)

(விட்டரம் - அரியாசனம். வாழ்த்து - ஆகு பெயராய் வாழ்த்தும் அடியாரைக் குறித்தது. ஈட்டம் - அவைக் களக் கிழமை புடையார். செய்யகோல் - செங்கோல். மௌலி - கிரீடம், ஓம் சைவசமயானந்தம் - பிரணவ சைவ ஆனந்தப் பாரம்பரை).

கடலுழுதே தேனேயென் கண்ணே கவலைப்
படுநியா தென்னைமுகம் பார்த்து பாராயோ.

மேலும் வைராக்யத்தைத் தடியாகவும் மனத்தையே குரங்கென்றும் கூறுவதும் உண்டு.

"தளராமை என்னுமொரு தடி கொண்டடிக்கவோ வலியிலேன்"

"வாய்கொண்டுரைத்தல் அரிது என் செய்கேன்
என் செய்கேன்
வள்ளலுன் சேவடிக்கண் மன்னாது
........உழலு மெனது மனது
பேய்கொண்டு கள்ளுண்டு கோலினால்
மொத்துண்டு
பித்துண்ட வன் குரங்கோ"
"மன மெனுமோர் பேய்க் குரங்கு"
"பாழ்த்த மனக் குரங்காட்டம் பார்க்க முடியாதே"
(வடலூர் வள்ளல்)

"காடுங் கரையும் மனக் குரங்கு கால்விட்டோட"
(தாயுமானூர்)

என்று மேற்கூறிய திருவாக்குகளால் குரங்குகள் வழி மறித்ததும் சிறந்த கருத்தைத் தெரிவிக்கிறது.

இன்னனம் படி யேறி மேலே சென்றால் முன்னுறக் காட்சி வழங்குபவர் வையாபுரித்துரை. தன்னை வணங்குவோ ரெல்லாம் முன்னே வணங்குமாறு நிற்கு மிவர் பெருமை யெல்லாம் அடுத்த இதழில் காண்பீர்கள்.

உள்ள மறிவாய் உழப்பறிவாய் நான் ஏழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.

கதிர்காம யாத்திரை

தரிசனம்

கி. வா. ஜகந்நாதன்

நாங்கள் கதிர்காமம் சென்றபோது உத்ஸவம் ஒன்றும் இல்லை. ஆதலின் எங்கும் அமைதியே குடிகொண்டிருந்தது. மடங்களிலும் கோவிலிலும் சில ஜனங்களே இருந்தார்கள். மாணிக்க கங்கையில் நீராடிய போதே இங்கே பூஜை முடிந்து விட்டது. கோயிற் கதவையும் சாத்திவிட்டார்கள். நாங்கள் புறவாயில் வழியே கோயிலின் முன்னுள்ள வெளியைக் கடந்து கோயிலுக்கு அருகே வந்தோம். கதவு சாத்தியிருந்தது. "இவ்வளவு தூரம் வந்தும் உள்ளே புகமுடியாமல், தரிசனம் செய்ய இயலாமல் போனால் என்ன செய்வது?" என்ற கவலை எனக்குச் சிறிதே உண்டாயிற்று. ஆனால், அங்கே உள்ள பூசாரியை எப்பொழுது கூப்பிட்டாலும் வருவார் என்பதைக் கேட்ட பிறகே ஆறுதல் பெற்றேன்.

கோயிற் பூசை செய்கிறவர் சிங்களவர். அவர் வந்து கோயிற் கதவைத் திறந்தார். அந்த முன் மண்டபத்தில் கர்ப்பக் கிருகத்துக்குப் போகும் படிகள் இருக்கின்றன. கர்ப்பக் கிருக வாசலில் முன்னே குறித்த திரை இருக்கிறது. கீழே குத்து விளக்குகளும் தூபக்கால்களும் இருக்கின்றன. பூசாரிகளைக் கப்புராளைமார் என்று அங்கே வழங்குவதை முன்பே சொன்னேன்.

பூசாரி எங்கள் கையில் விபூதியைத் தந்தார். அவருக்குத் தமிழ் தெரியாது. சிங்களந்தான் தெரியும். "கருப்பக்கிருகத்துக்குள் என்ன இருக்கிறது?" என்று கேட்கவேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. சிங்கள பாஷை எனக்குத் தெரியாது. தெரிந்தாலும் அவர் உண்மையைச் சொல்லப் போகிறாரா என்ன?

கன்றிலுக்குச் சேதா கனிந்திரங்கல் போலெனக்
கென்றிரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே.

வெளியிலே யாழ்ப்பாணத்துப் பெண்மணி ஒருவர் கந்தர் அநுபூதியைப் பாராயணம் செய்துகொண்டிருந்தார். காலிலிருந்து முஸ்லீம்கள் தரிசனத்துக்கு வந்திருந்தார்கள்.

கோயிலை வலம் வந்தோம். அங்கிருந்த அரசவிருட்சத்தைக் கண்டவுடன் எங்களுடன் வந்த சிங்களவர் அதை மண்டியிட்டு வணங்கினர். பிராகாரத்தை ஒட்டிச் சின்னச் சின்ன வளைவுக்குள் நாகத்தைப் போன்ற பிம்பங்கள் வைத்து அவற்றுக்கு முன் விளக்கை ஏற்றி வைத்திருந்தார்கள்.

பின்பு கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள தெய்வயானை கோயிலுக்குச் சென்றோம். அங்கே கல்யாண மண்டபம் என்ற இடத்தில் ஒரு துறவி இருந்தார். பரம்பரையாக இந்தத் தெய்வயானையம்மன் கோயில் நிர்வாகம் இத்தகைய துறவிகளிடம் இருந்து வருகிறதாம். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த குருக்கள் சிலர் அங்கே இருந்தார்கள். "எங்கே சாப்பிடப் போகிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார். வேறு இடத்தில் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னோம்.

வீதியில் உள்ள மடங்களில் சிலவற்றைப் பார்த்தோம். பிறகு வள்ளியம்மை கோயிலுக்குச் சென்றோம். கதிர்காம எல்லைக்குள் எந்தக் கோயிலானாலும் அதில் திரைதான் போட்டிருக்கிறார்கள். அந்தத் திரைக்குத்தான் பூசை. வள்ளியம்மை கோயிலுக்குக் கிழக்குப் பக்கத்தில் ஒரு முஸ்லீம் பக்தருடைய சமாதி இருக்கிறது. அவர் முத்துலிங்கஸ்வாமி என்ற சைவப் பெரியாருடைய தொண்டராக வாழ்ந்தவர் என்று சிலர் கூறுகிறார்கள். கதிர்காமத் தலத்தில் வேறு சில முஸ்லீம் ஞானிகள் வந்து வழிபட்டார்கள் என்று தெரிகிறது. ஹிஙிலுர் அலிஹுி என்ற முஸ்லீம் பெரியார் இந்தத் தலத்துக்கு வந்து சிலகாலம் தங்கியிருந்தாரென்றும் காளடையில் அவர் சிறந்த ஞானியாயினரென்றும் ஒரு செய்தி வழங்குகிறது.*

கோ. கடேசையர் என்ற அறிஞர் எழுதிய 'கதிர்காமம்' என்னும் புத்தகத்தில் பின்வரும் செய்தியைக் காணலாம்:

---

* கதிர்காமம்—குல. சபாரதன் எழுதியது, ப. 84

'கதிர்காமத்திற்கு இந்திய முஸ்லீம்களில் அநேகர் வந்து போகிறார்கள் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்தோம். கதிர் காமத்திலுள்ள மாணிக்க கங்கையின் ஓரத்தில் ஓர் ஊற்றுண் டென்பதும், அந்த ஊற்றுத் தண்ணீரைப் பருகியவர் சிரஞ்சீவி யாக இருக்க முடியும் என்பதும் அவர்கள் கொள்கை. அவர் களுள் கிதிர்நபி என்பவர் அந்த ஊற்றுத் தண்ணீரைப் பருகிச் சிரஞ்சீவியாக இருந்தார் என்றும், அவரே இஸ்லாம் மார்க்கத்தை மாலத்திவு முதலிய இடங்களில் பரப்பினார் என்றும் சொல்லப் படுகிறது. அந்த ஊற்று இருந்த இடம் இப்பொழுது தெரிய வில்லை?'

பண்டைக் காலந்தொட்டுக் கதிர்காமத்தில் நடக்கும் திருவிழாக் களில் முஸ்லீம்கள் பந்தம் பிடிக்கும் வழக்கம் இருந்து வந்ததாம். பிற்காலத்தில் இந்த வழக்கம் நின்றுவிட்டது.

முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் சில பெரிய தலங் களில் முஸ்லீம்களின் தொடர்பும் இருப்பது வியத்தற்குரிய செய்தியாகும். பழநி மலையின் பின் புறத்தில் முஸ்லீம்கள் தொழும் இடம் ஒன்று இருக்கிறது. திருப்பரங்குன்றத்தில் மலையின் அடியில் முருகன் திருக்கோயில் அமைந்திருக்கிறது. மலைக்கு மேல் முஸ்லீம்கள் தொழும் கோயில் உண்டு. அதைச் 'சிக்கந்தர் கோயில் என்பார்கள். 'ஸ்ரீ ஸ்கந்தரே சிக்கந்தர் ஆகி விட்டார்.' என்று ஒரு முருகன் அடியார் இதற்குப் பொருள் கூறினார்.

வள்ளியம்மையின் திருக்கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் முத்துலிங்க சுவாமியின் சமாதி இருக்கிறது. அங்கே சமாதியின் மேல் சிவலிங்கத்தை அமைத்திருக்கிறார்கள். அங்கே இருந்த ஒருவரை, "முத்துராமலிங்க ஸ்வாமி யார்?" என்று கேட்டேன். அவர் ஒரு கதையைச் சொன்னார்.

'காஷ்மீரத்திலிருந்து ஒரு பிராம்மணர் இங்கே வந்தார். அவரையே முத்துலிங்கஸ்வாமி என்று பிற்காலத்தில் வழங்கினர். இங்கே முருகன் மிகவும் சக்தியுடையவராக இருப்பதைக் கண்டு

**எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.**

அப் பெருமானை எடுத்துக்கொண்டு தம் ஊருக்குப் போய்விட வேண்டும் என்று நினைத்தார். அவருக்கு மந்திரமும் தந்திரமும் நன்றாகத் தெரியும். இங்குள்ள முருகனுடைய சக்தியை ஒரு யந்திரத்தில் ஆகர்ஷணம் செய்து வைத்துக்கொண்டார். அதை ஒருவரும் அறியாமல் எடுத்துக்கொண்டு இரவோடு இரவாக ஓடி விடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால் அதற்குள், முருகனை வெளியேற்றும் அந்த ஸ்வாமியின் எண்ணத்தை அறிந்த வள்ளியம்மையார், இங்குள்ள சிங்களத் தலைவர்களிடம் கனவிலே வந்து உண்மையைத் தெரிவித்துவிட்டார். வள்ளியம்மையார் சிங்கள வேடர் குலத்திலே உதித்த பெண். இங்கே அவளுக்கும் முருகனுக்கும் கல்யாணம் ஆயிற்று. கனவு கண்ட சிங்களவர் உடனே எழுந்து சென்று முத்துலிங்க ஸ்வாமியைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொண்டார்கள். அவர் தாம் வைத்திருந்த யந்திரத்தைச் சிங்களவர்களிடம் கொடுத்துவிட்டார். அந்த யந்திரமே கோயிலுக்குள் பெட்டிக்குள் இருக்கிறது. உத்ஸவ காலங்களில் அதையே யானைமேல் ஏற்றி ஊர்வலம் செய்விக்கிறார்கள். முத்துலிங்க ஸ்வாமிகள் முருகனை எடுத்துச் செல்ல முடியவில்லையே என்று ஏங்கினார். அவரால் முருகனைப் பிரிந்திருக்க முடியவில்லை. இந்தத் தலத்திலேயே வாழ்ந்துவந்தார். கடைசியில் இங்கேயே சமாதி அடைந்தார். தவத்திற் சிறந்தவர் அவர்.'

இந்தக் கதையைக் கேட்டேன். கதையை அப்படியே உண்மை யென்று நம்ப இயலாவிட்டாலும், உண்மையின் கரு அதில் இருக்கும் என்று தெளிந்தேன்.

வேல்ஸ்வரும் தமிழும்

ஸ்ரீவத்ஸன்

இக்காட்டினராகிய ஹிந்துக்களின் பண்டைய பண்பும் கலாசாரமும் அநேக ஆயிரம் வருடங்களாகவே வெற்றி

கற்றஅறிவால் உனைநான் கண்டவன்போற் கூத்தாடில்
குற்றமென்றென் நெஞ்சே கொதிக்கும் பராபரமே.

கரமான முன்னணியிலேயே இருந்து வந்திருக்கின்றன. "ஹிம்ஸா" என்னும் பதம், எவனொருவன் ஜீவன்கட்குத் துன்பமிழைத்தல் என்ற எண்ணத்தையே வெறுக்கிறானோ அவனே யாகும் என்று கூறப்பட்டுள்ளது. அத்தகைய அஹிம்சா தத்துவத்தையே மூலகாடியாகப் பெற்றுத் திகழும் இக் கலாசாரம், ஆதியில் வேதங்கள் மூலமாகவே பரவப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இவைகள் கடவுளைச் சிருஷ்டிப்பதில்லை. ஆனால் இறைவன் ஒன்றேயென்றும் அவனை யறிந்து ஐக்கியப்படும் நிலையே முத்தி நிலை யென்றும் கூறுகின்றன.

இந்நிலையை யடைய முற்பகுதியில் கர்மா, உபாசனை யென்னும் ஒழுக்கங்களையும் பிற்பகுதியில் ஞான ஒழுக்கங்களையும் திறம்படக் கூறுகின்றன. முதன் முதலில் வேதங்களாகிய இவைகளும், பிறகு அவற்றினை யடுத்தும் அனுசரித்தும் மற்றும் அநேக நூல்களும் ஏற்பட்டன. இவற்றின் விபரங்களை பண்டைய நூலில் கண்டுள்ளபடி இங்கு காண்க.

1. இருக்கு வேதமும் அதைச் சார்ந்த பிராம்மணங்களும் உபநிஷத்துக்களுமாகச் சேர்ந்து 7,07,000 சுலோகங்கள்

2. யஜுர் வேதமும் அதைச் சார்ந்தவைகளும் 4,55,000 ,,

3. சாம வேதமும் ,, 9,59,000

4. அதர்வண வேதமும் 4,80,000 ,,

5. உபவேதங்களாகிய ஆயுர் வேதம் 3,92,000

ஐயோ உனைக்காண்பான் ஆசைகொண்ட தத்தனையும்
பொய்யோ வெளியாய்ப் புகலாய் பராபரமே.

	தனுர் வேதம்	3,00,000	,,
	கந்தர்வ வேதம்	1,36,000	,,
	சிற்ப வேதம் முதலியன	3,32,000	
6.	வேதாங்கங்கள் வியாகரணம்	1,00,000	,,
	கோசம்	55,000	
	சந்தஸ்	1,72,000	,,
	ஜோதிஷம்	1,00,000	
	சிக்ஷை	90,000	,,
	கல்பம்	2,48,000	
7.	வேதாந்தங்கள்: சாங்கியம்	3,08,000	,,
	நியாயம்	2,15,000	
	வைசேஷிகம்	2,75,000	,,
	யோகம்	1,50,000	
	மீமாம்ஸை	2,05,000	,,
	வேதாந்தம்	4,36,000	
8.	காம சாஸ்திரம்	1,50,000	,,

பிறகு இவைகளை யடுத்து பல புராணங்களும் உப புராணங்களும் ஏற்பட்டன. அவையாவன :—

9.	1	பிரம்ம புராணம்	10,000	
	2	பத்ம புராணம்	55,000	,,
	3	வைஷ்ணவ புராணம்	23,000	
	4	சைவ புராணம்	24,000	,,
	5	பாகவதம்	18,000	
	6	நாரதீய புராணம்	25,000	,,

துன்பக்கடலில் துளேந்தேற்குன் ஆனந்த
இன்பக்கடல்வருவ தெந்நாள் பராபரமே.

7	மார்க்கண்டேய புராணம்	9,000	
8	ஆக்னேய புராணம்	15,400	,,
9	பவிஷ்ய புராணம்	14,500	
10	வராக புராணம்	24,000	,,
11	ஸ்காந்த புராணம்	81,000	
12	வாமன புராணம்	10,000	,,
13	கூர்ம புராணம்	17,000	
14	மத்ஸ்ய புராணம்	14,000	,,
15	கருட புராணம்	19,000	
16	பிரம்மாண்ட புராணம்	12,000	,,
17	பிரம்மவைவர்த புராணம்	18,000	
18	லிங்க புராணம்	11,000	,,

10. உப புராணங்களாகிய ஸனத்குமாரம், நாரஸிம்கம் நந்தி, சிவதர்மம், துர்வாஸம், தேவி பாகவதம், கபிலம், ஔசனம், ஸௌம்யம், வருணம், காளிகா, பராசரியம், மாரீசம், ஸாம்பேசம், பார்கவம், வாஸிஷ்ட லிங்கம், மானவம், ஸௌரம் முதலிய பதினெட்டு நூல்கள்.

11. மகாபாரதம் இலக்ஷம் கிரந்தங்கள்

12. இராமாயணம் 24,000 கிரந்தங்கள்

இவைகள் தவிர 64 தந்திர சாஸ்திரங்களும் 28 ஆகம நூல்களும், மற்றும் அநேக பாஷ்யங்களுமாக பல ஆயிரக் கணக்கில் சுலோகங்கள் அடங்கிய நூல்களும் உள.

புராணங்கள்:— புராணங்கள் யாவும் பொதுவாக சுசவா சிருஷ்டி. தேவ வர்க்கங்கள், மனுடவர்க்கங்கள்,

---

வஞ்சனையும் பொய்யுமுள்ளே வைத்தழுக்கா றுயுளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ நெறிதான் பராபரமே.

தேவதைகள், ரிஷிகள், மதச்சடங்குகள், மனுக்கள் மன்வந்தரங்கள், சூரிய அல்லது சந்திர வம்ச இராஜ பரம்பரைகள், ஏதாவதொரு முக்கிய தெய்வமும் அதை ஆதரிக்கும் முறைகளும், அது சம்பந்தமான சில பழங் கதைகள், அக்காலத்திய ஜனங்கள், அவர்களின் கலா சாரங்கள் முதலியவற்றினைக் கூறும்.

முக்கியமாக ஒவ்வொரு புராணமும் ஏதாமொரு குறிப்பிட்ட தெய்வத்திற்கு எல்லாவிதமான ஈசத்துவத்தை யும் கற்பித்து, அதனை ஆதரிக்கும் முறைகள், அது சம்பந்தமான மாகாத்மியங்கள், அத்தகைய ஆராதனை களால் நன்மை யடைந்தவர்களின் விவரங்களையும் குறிக்கும்.

நூல்கள் பொதுவாக இயற்றியவர் பெயரையோ அல்லது நூலின் கண் கூறப்பட்டுள்ள பொருளினைப் பற்றிய பெயரையோ தாங்கி நிற்றல் இயல்பு.

நாரதம், பிரம்மம், மார்க்கண்டேயம் முதலிய புரா ணங்கள் முறையே நாரத மகரிஷி, பிரம்மதேவர், மார்க் கண்டேய ரிஷி இவர்களால் பிறருக்குக் கூறப்பட்டவை. சைவம், வைணவம் முதலிய புராணங்கள் முறையே சிவனைப் பற்றியும் விஷ்ணுவைப் பற்றியும் விரிவாகக் கூறும். மற்றும் சில இவ்விருவகைக்கும் புறம்பாகவும் இருக்கும். அவ்வகையினைச் சார்ந்தது ஸ்கந்த புராணம். இந்த ஸ்கந்த னென்னும் சுப்பிரமணியப் பெருமானால் பிறருக்கு கூறப்படவுமில்லை. அல்லது அவரைப்பற்றிய சரிதங்களை மட்டிலுமே அடங்கியதாகவும் இல்லை. இந்த ஸ்கந்தனின் கூற்றே தனிப்பட்டதாகவன்றோ யிருக்கிறது.

ஸ்கந்த உபநிஷத்: இந்த உபநிஷத் 108 முக்கிய உபநிஷத்துக்களில் ஒன்று. கிருஷ்ணயஜுர் வேதத்தைச் சார்ந்தது. இந்த நூலுக்கு ஒரு தனிப் பெருமை உண்டு. இதை ஓர் சமரச உபநிஷத் என்றும், ஆதிநூல்களில் கண்டுள்ள தத்துவத்தை அறிவிப்பது என்றும் கூறப் பட்டுள்ளது.

இதின் சாராம்சமாவது:—

"பிரம்மனும் ஆத்மாவும் ஒன்றே; அதை யறிபவனே சிவன்.
அவனே விஷ்ணு. அவனே ஜோதிகளில் சிறந்தவன்.
அவனே யான்; இதில் யாதொரு சங்கையும் வேண்டாம்.

சிவனின் இதயமே விஷ்ணு. விஷ்ணுவின் இதயமே சிவன். எனக்கு யாதொரு பேதமும் தோன்றவில்லை; இதை அறிவாளிகள் அறிவார்கள் என்றவாறு.

இதே கருத்துக்கள் "சுப்பிரமணியர் ஞானம் 500" என்னும் நூலிலும் காண்கிறது.

சாந்தோக்கிய உபநிஷத்: இந்த உபநிடதத்தில் இருளின் எல்லையைக் கடப்பவனே ஸ்கந்தன்; அவனே சனத் குமாரன் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஸ்கந்த உபநிஷத் பேத உணர்ச்சியைத் தடுத்து ஒற்றுமையை வலியுறுத்தும் ஓர் தெள்ளிய நூல் என்று பாஷியக்காரர்கள் கூறுகிறார்கள். இது தெய்வங்களாகக் கருதப்படும் மூர்த்தங்களுள் பேதமின்மையை வற்புறுத்துகிறது. கீதையில் கூறியபடி, யார் யார் எந்த எந்த விதமாக உபாசிக்கின்றனரோ அவ்வவ் வகையில் அருள் கிடைக்கும் என்ற தத்துவத்தைப் போதிக்கிறது. சிவவிஷ்ணு பேத

எத்தனைதான் சன்மமெடுத் தெத்தனைநான் பட்டதுயர்
அத்தனையும் நீயறிந்த தன்றோ பராபரமே.

பின்மையை முக்கியமாகக் குறிக்கிறது. வேறு காரணங்களுடன் கூட இஃதினையும் மனதில்கொண்டே நமது அருணகிரியாரும், கந்தனைப் பற்றிப் பாடிய புகழ்ப் பாக்களில் "பெருமாளே" என்று விளிப்பதன் மூலம் தன் உலக மக்கட்கு இச்சிவ விஷ்ணு பேத மின்மையை உணர்த்தத் துணிந்தார் என்று தடையின்றிக் கூறலாம்.

மற்றும் இராமாயணம், பார்க்கவ புராணம், லிங்கம், வராகம், தேவி பாகவதம், முதலிய நூல்களிலும் ஸ்கந்தன் என்ற பெயருடன், அல்லது சுப்பிரமணியன் என்ற பெயருடன், அல்லது பெரும்பாலும் கார்த்திகேயன் என்ற பெயருடன் இவரது (ஸ்கந்தரது) சரித்திரம் காணப்படுகிறது.

இதுகாறும் கிடைத்துள்ள பதிப்பிலுள்ள புராணங்களிலும், மற்றைய நூல்களிலும், சிலவற்றில் பூராவாக அதற்கான தொகைகளில் கண்டபடி விவரங்கள் காணப்படவில்லை. சிற்சில நூல்களில் சில பாகங்களே காணப்படுகின்றன. மற்றும் சில நூல்களில் உபரியாகவும் காணப்படுகின்றன.

உதாரணமாக மகாப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாமம் என்னும் நூல், பிரம்மாண்ட புராணத்தின் ஓர் பகுதி என்று கண்டிருக்கிறது. ஆனால் வெளிவந்துள்ள பிரம்மாண்ட புராணத்தில் இப்பகுதி காணப்படவில்லை, மற்றைய பகுதிகள் எங்குள்ளன என்பது பற்றி, பரோடா, நேபால், காஷ்மீர் முதலிய இந்நூல்களுக்கு களஞ்சியமாகிய நூல் நிலயங்களிலும், ஆராய்ச்சியாளர்கள் இன்னும் கவனித்து வருகிறார்கள்.

இந்தநாள் சற்றும் இரங்கிலையேற் காலன்வரும்
அந்தநாள் காக்கவல்லார் ஆர்காண் பராபரமே.

ஸ்கந்தனின் கூற்றே தனி என்று கூறினோமல்லவா. அவ்வாறே, ஸ்கந்த புராணம் அசல் 81,000 சுலோகங்கள் தவிர, மற்றும் அநேக நூல்களும் (ஏறக்குறைய அத் தொகைக்கு மேலாகவே) அந்நூலைச் சார்ந்தது என்று நூலின் இறுதியில், "இதி ஸ்காந்த புராணே" என்றோ, "ஸ்காந்த புராணே உபரி பாகே" என்றோ கூறிமுடிக்கின்றன.

பதிப்பிலுள்ள ஸ்காந்த புராணம் பல கண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவை :

1	மாகேசுவர கண்டம்	(உட்பிரிவுகள்	4)
2	வைஷ்ணவ கண்டம்	,,	9
3	பிரும்ம கண்டம்		3
4	காசி கண்டம்	,,	2
5	அவந்தி கண்டம்		3
6	நாகர கண்டம்		1
7	பிரபாஸ கண்டம்	,,	4

மேலே கண்ட கண்டங்கள் தவிர மற்றும் பல சம்ஹிதைகள் கொண்ட ஸ்கந்த புராணமும் உளது. அவை யாவன.

1	சனற்குமார சம்ஹிதை	36,000	சுலோகங்கள்
2	சூத சம்ஹிதை	6,000	,,
3	சங்கர சம்ஹிதை	30,000	
4	வைஷ்ணவ சம்ஹிதை	5,000	,,
5	பிரம்ம சம்ஹிதை	3,000	
6	ஸௌர சம்ஹிதை	1000	,,

உற்றுற்று நாடி உளம்மருண்ட பாவியை நீ
சற்றிரங்கி ஆளத் தகாதோ பராபரமே.

இவைகள் தவிர அகஸ்திய சம்ஹிதை. உபமிபு சம்ஹிதை முதலியனவும் ஸ்காந்த புராணம் உபரி பாகத்தைச் சார்ந்தது என்று கூறுகின்றன.

மேலே கண்டுள்ள எல்லா நூல்களிலும் ஸ்கந்தரைப் பற்றிய சரிதம் இல்லே. காணப்படும் நூற்களின் பாகங்களில் சில ஸ்கந்தனின் பிறப்புவரையில் கூறும்; சில பிறப்பு, வளர்ப்பு, தாரகாசுரவதம், தேவசேனுபதித்துவம் வகித்தல் வரையில் கூறும். மற்றும் சில தேவசேனே மணம் வரையில் கூறி நிறுத்தும். சில நூல்கள் தேவசேனு மணம் முடித்து தென்னுடு போந்ததையும் கூறி நிறுத்தும். ஆராய்ந்தவளவில் வள்ளியின் மணம் பற்றிய சரிதம் இவற்றில் காணப்படவில்லே.

ஆனல் இவ்வளவு நூற்களில் சங்கர சம்ஹிதை என்னும் ஒன்றில்தான் ஸ்ரீ ஸ்கந்தனின் சரிதம் தொடர்ச்சியாக சம்பவ கண்டம், அசுரகண்டம், வீரமகேந்திர கண்டம், யுத்த கண்டம், தேவகண்டம், தக்ஷகண்டம், உபதேச கண்டம் என்ற பல பிரிவுகளுடன் கூறப்பட்டுள்ளது. இதிலும், சில பாட பேதங்கள் காணப்படுகின்றன. அவற்றினைப் பிறகு கூறுவோமாக.

இந்த சங்கர சம்ஹிதையை ஆதி நூலாகக் கொண்டே ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியார் ஸ்வாமிகள் தமிழில் காந்த புராணம் தொகுத்துள்ளார், அதனைத் தழுவியே ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளும் "குமார சுவாமியம்" என்னும் நூலே இயற்றி யுள்ளார்.

பாடிப் படித்துலகிற் பாராட்டி நிற்பதற்கோ
தேடி யெனேயடிமை சேர்த்தாய் பராபரமே.

நமது அருணகிரியார் பாடிய திருப்புகழும், இந்த சங்கரசம் ஹிதையில் கூறப்பட்டுள்ள ஸ்கந்தனைப் பற்றியே யாகும்.

குறிப்பு:— வேதம். தொன்று தொட்டு வழங்கிவரும் வேதங்கள், உபவேதங்கள், வேதாங்கங்கள், உபவேதாங்கங்கள் இவற்றின் விவரத்தை மேலே கண்டுள்ளோம். நாளடைவில் பிற மதத்தினராகிய கிறிஸ்து மதத்தினரும் மகம்மது நபிக்குப் பிறகு ஏற்பட்ட மகமதிய மதத்தினரும் கூட தமது பைபிளையும், குர்ஆனையும் வேதம் என்று கூறத் தலைப்பட்டனர். இதில் கிறிஸ்துவ மதத்தினர் சற்று அதிகமாகவே "வேதாகமம்" என்று சேர்த்துக் கூறத் தலைப்பட்டனர். மற்றும் சிலர் குறிப்பிட்டநூல் வேதத்துக்கு சமானம் என்றோ, ஐந்தாவது மறை என்றோ கூறுவதின் மூலம், ஆதி வேதத்திற்கே முக்கியத்துவத்தை கொடுக்கலாயினர். மற்றும் சிலர் வேதங்கள் தைத்ரியம், பௌதிகம், தலவர்க்கம், சாமவேதம் என்ற நான்கு பிரிவுகள் என்று கூறலாயினர். இவர்கள் கூற்றுக்குச் சரியான ஆதாரங்கள் இன்னும் புலப்படுத்தவில்லை. ஆனால் தைதரீயம் என்பது யஜுர்வேதத்தைச் சார்ந்த ஓர் உபநிஷத்தேயன்றி வேதமல்ல. மற்றும் "பௌதிகம், தலவர்க்கம்"

(மேற்காணும் விஷயங்களைப் பற்றி மற்ற விபரம் அறிய வேண்டுவோர் 7-B.ஆர்ம்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்திற்கு எழுதவும்.)

வேலாயுத மூப்பனார்

(ரசபதி)

பாண்டி நாட்டுத் தென்காசியைச் சேர்ந்துளது ஒரு சிற்றூர். ஏறக்குறைய அவ்வூரில் இருபது குடிசைகளே இருக்கின்றன. அவைகளில் வாழ்கின்றவர்கள் அனைவரும் மறவர்கள். பொதுவாக எல்லோரும் நல்லவர்கள். ஒவ்வொருவருக்கும் சிறிதளவு நிலம் இருக்கிறது. ஆழிபோலும் செல்வம் அழிந்து படும்; மேழிச் செல்வம் கோழை படாது என்ற திட நம்பிக்கை யுடையவர்கள் அவர்கள்.

சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலுமெனக் காசை பராபரமே.

இரண்டொரு ஆண்டுகளாக நல்லமழை யில்லை. அதனால் பயிர் விளைவிற்கு அதிக முயற்சி செய்யவேண்டி யிருந்தது. பட்ட பாட்டிற்குரிய அளவுதான் பயன் விளைந்தது.

அவ்வூரில் ஒரு முதிர்ந்த அன்பர். அவர் பெயர் வேலாயுத மூப்பனார். நல்லற இல்லறம் நடத்துபவர். கார்த்திகேயா........! என்று கூவும் அவர் குரலை, கிருத்திகை தோறும் திருச்செந்தூரில் கேட்கலாம். முருக விசாகா ! விசாக மூர்த்தீ என்ற அவர் அன்பு விளி, விசாகந் தோறும் செந்திலான் திருமுன் பெரிது ஒலிக்கும் மாயா மலையை மாய்த்தோனே! கரிமுகனைக் கடிந்தோனே ! அரிமுகனை அழித்தோனே ! சூர சம்ஹார! அவுண இருள் கடிந்த ஞான திவாகரா! எம் மைக்கா ! எல்லோரையும் கா எனும் பிரார்த்தனையை, சஷ்டி தோறும் திருச்செந்திலான் திருமுன் செய்து திரும்புவார்.

மயிலம்மை யென்பது, அவர் தேவி பெயர். பெயர்க் கேற்ற சாயல்; மதி நலம் மிக்க அவள், குணத்திற் சிறந்த மகராஜி; கபடு சூது காணாதாள் என்று, மயிலம்மையை அவ்வூர் மதிப்பிடு கின்றது.

இனிய மக்கள் இருவர் உளர். ஒரு சேய்க்கு வயது ஐந்து; மற்றொரு மகவுக்கு வயது மூன்று. மனைவியின் அழகும், மக்கள் மழலையும் மூப்பனாரை மயக்கும். வீட்டுள் நுழைந்ததும் மனைவியை எதிரில் இருத்தி, மக்களை மடியில் வைத்து விளையாடு வர். காயம் கலந்த அந்த மாய சுகத்தால் மனோலயம் எய்துவர் உயிர் உடல் பொருள் மூன்றும், மனைவியாய், மக்களாய் உருக் கொண்டதாக அவர் பாவனை.

நாளைக்குக் கிருத்திகை, சஷ்டி, விசாகம் என்று அவ்வந்நாளை மனைவி நினைவுறுத்துவள். அதன் பின், சிந்தனை செந்திலுக்குச் செல்லும். உடனே அத்தலத்திற்குப் புறப்படுவார். அங்கு சென் றிருக்கும் போது, மனைவி மக்களையே மறந்து விடுவார். இறை வன் திரு முன் நிற்பார்; அவர் வீழ்ந்து வணங்கி யெழுவதில் தான் எவ்வளவு விநயம்?

• நேச நிருவிகற்ப நிட்டையல்லால் உன்னடிமைக் காசையுண்டோ நீயறியா தன்றே பராபரமே.

அத்திப் பழம் போல்வது இந்த உடல்! அரைக் கீரைப் போல்வது நுண்ணுடல்; அதி நுட்ப இவ்வுடல்கள் உனது அருட் காப்பில் உள்ளன; காணாத போதும் கண்காணிக்க எம் கண்ணினுளை; எம் கருத்திலுளை! காயாபுரிக் கோட்டையிலும் உனது அருள் மணம் கமழ்கிறது துரையே!

கிளர்ந்தவுடலாகிய சட்டையைக் காலம் கிழித்தெறிய முனை கிறது; சிடு சிடு என்று நாட்கள் சென்று கொண்டே யிருக்கின்றன. சேந்தா! உனக்கபயம் வேந்தே என்று அவர் செய்யும் துதி ஒலி, கல் மனத்தையுங் கரைக்கும். அத்தலத்தில் இருக்கும் வரை, மனைவி மக்களையே மறந்திடுவார். உயிர் பொருள் உடலு மான மூன்றும், உமையாள் சுதனிடம் இருப்பதாகவே உணர் வார். இங்ஙனம் அங்குள போது அம்மயம்; வீட்டிற்கு வந்த போது குடும்பமயம்; புனித மூப்பனார் போக்கு இது.

சென்ற ஆண்டில் சாவியாய் விட்டது புன்செய்ப் பயிர். அதனால், குடும்பத்தில் வறுமை, கோர தாண்டவம் செய்தது.

இந்த ஆண்டில் சிறிது மழை பெய்துளது. அதனால் கொஞ்சம் நம்பிக்கை உதயமாயது. ஆழம்பட நிலத்தை ஏர் உழுதார்; எருவிட்டார். நல்ல நாள் பார்த்தார். கேழ்வரகு நாற்று நட்டார்.

நடவு ஆரம்பித்த போதே, திருச்செந்தில் வேலா! வள்ளி மணாளா! பயிர் முதிர்ந்து விளைந்தால், முதல் முதல் களி செய்து, நிமலா! தேனொடு கலந்து உனக்கு நிவேதிக்கிறேன்; அருள் பாலிக்க வேண்டும்; என்று உள்ள முருகித் திசை நோக்கித் தொழுதார்.

விறுவிறுத்து காலம் விரைந்து சென்று கழிந்தது. பிரார்த் தனை பயனைச் செய்தது. தாராளமாகப் பயிர் தலையெடுத்தது; கதிர் முற்றியது. வியந்தது ஊர்; கேழ்வரகு ஏராளமாக விளைந் தது; கூலி யாட்களைக் கூட்டினர். அறுவடை செய்தார்; அடித்து மிதித்தார். பெரும்பாரமான கேழ்வரகை, பல மூட்டைகளாகக் கட்டினர்; இல்லத்தில் சேர்த்தார்; குதூகலித்தது குடும்பம்.

கண்ணுவா ரேனும்உனைக் கைகுவியா ராயினநத
மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே.

ஒரு நாள் பகல் இரண்டு மணி.

மயிலூ! என்ன செய்கிறாய் என்றார் மூப்பனார். ஏன்! குழந்தைகட்குச் சோறூட்டுகிறேன் என்றாள் மனையாள்.

சரி சரி! வெளியில் போய் வருகிறேன்; புதுக் கேழ்வரகைக் கொஞ்சம் அரைத்து, இன்று இரவு உணவிற்குக் களி சமைத்துவை! அதற்குப் பொருந்தும் வகையில் கறிகளைச் சித்தப்படுத்து! அப்பா! நாவூறுகிறது; களியமுது உட்கொண்டு ஒன்பது மாதங்களாகின்றன; என்ன நான் சொல்வது தெரிகிறதா?

சிரித்துக் கொண்டே, அப்படியே சித்தப் படுத்துகிறேன்; நல்ல வெயிலில் புறப்படுகிறீர்களே!

என்ன செய்வது? அடுத்த கிராமம் சென்று திரும்பி வருகிறேன். அங்கு ஒருவரை அவசரமாகப் பார்க்கவேண்டியுளது. வீட்டில் தேன் இல்லை. அதையும் அவ்வூரில் வாங்கிக் கொண்டு, விரைவில் திரும்பி விடுகிறேன் என்றார் மூப்பனார்.

அப்பா! அப்பா! நான் கூட வருகிறேன் என்று உண்பதை விட்டு ஓடிவந்த கான் முளைகள் இரண்டும், மூப்பனார் கைகளைப் பற்றிக் கொண்டன.

இருவரையும் வாரி எடுத்து, இருபுறம் அணைத்தார்; வண்டு போல் பிறழும் அவர்கள் கண்கள், மழலை மொழிகள், மனத்தை உருக்குகின்றன.

இதோ பாருங்கள்! நல்ல வெய்யில், தலைவாரி, பின்னல் போட்டு, தலையில் பூ வைத்து, பட்டுச் சட்டை தரித்து, வண்டி கட்டி, அதில் ஏறிக் கொண்டு, அம்மாவுடன் மாலையில் புறப்படுவம்; அதுதான் சரி; நீங்கள் சமத்தோ யில்லையோ என்று அவர்களோடு சிறிது நேரம் கொஞ்சினார் மூப்பனார்.

ஆமா! ஆமா! நிச்சயமா மாலை போகலாமா அப்பா!

கட்டாயமாக நான் வந்து அழைத்துப் போகிறேன் என்று முத்தம் அளித்து, அம்மாவிடம் விளையாடிண்டு இருங்கள், மயிலூ! பத்திரம் குழந்தைகள்! இதோ வருகிறேன் என்று

---

* கொல்லா விரதங் குவலயமெல் லாம்ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.

பக்கத்தில் சோறூட்டிய கையுடன் இருக்கும் மனைவியிடம் மக்களை ஒப்படைத்தார்.

சிரித்துக் கொண்டே, அப்பா பிறகு வருவர்; மாலையில் வேடிக்கையாக வண்டியேறிப் புறப்படலாம் என்று கொஞ்சிக் கொண்டே பிள்ளைகளை அணைத்துக் கொண்ட மயிலுவை, தாடை யில் லேசாகத் தட்டி, ஆஹாஹா என்று சிரித்துவிட்டு முடுகிச் சென்றார் மூப்பனார்.

கணவர் சொன்ன களியமுது சமைக்கும முயற்சியில் மயிலு ஈடு பட்டாள். எல்லாம் சித்தமாயிற்று. இரவு ஏழுமணி. சென்ற மூப்பனாரும் திரும்பினார். வந்ததும் பிள்ளைகள் ஓடி வந்து, எங்கே அப்பா வண்டி என்று நச்சரிக்க லாயினர்.

போன இடத்தில் நாழியாய் விட்டது. நாளை காலை கட்டா யம் புறப்படுவம்; இன்று நேரமாய்விட்டது. சாப்பிடலாம் வாருங்கள் என்று கொஞ்சுதலுடன் அழைத்துக் கொண்டு சென்று, கை காலலம்பி உண்பதற்குச் சித்தமானார்.

முன் பெல்லாம், மாலையில் முருகன் கோயில் வழி பாட்டை முடித்தபின், உணவு கொள் பழக்கம் உடையவர்; வர வர மனை வியின் அழகில் மயங்கி, மக்கள் மழலையில் சொக்கி, வேலையில்லா நேரமெல்லாம், அவர்கள் மத்தியில் இருக்கவே விரும்பியது மனம்.

நிலவு ட்டப் பகல் போல் நிழலிடுகிறது. குழந்தைகளு டன் உனக்கும் சேர்த்துப் புறக்கடையில் இலையிடு; எல்லோரும் சேர்ந்துண்பம் என்றார் மூப்பனார். ஆமாம் அம்மா ஆமாம் என்று பிள்ளைகளும் குதிபோட லாயினர்.

சரி என்று புறக்கடையில் எல்லோரும் அமர்ந்தனர், களி உருண்டைகள் தேனில் கலந்த பின், வெகு இனிமையாகக் கண் ணுக்குத் தெரிகிறது ஒரே குதூகலம். மனைவியைப் பார்க்கிறார். பூப்போல இருக்கிறதே களி! அடாடா! வெகு அருமை!

சும்மா சாப்பிடுங்கள்! புகழ்வது போதும்.

பொய்யன் இவன் என்றுமெள்ளப் போதிப்பார் சொற்கேட்டுக்
கைவிடவும் வேண்டாமென் கண்ணே பராபரமே.

அப்பா! அப்பா! அம்மா சிரிக்கிறு!

யாரைப் பார்த்து?

அண்ணனைப் பார்த்து என்ருன் இளையவன்.

இல்லே, அப்பாவைப் பார்த்துத் தான் என்ருன் மூத்தமகன்.

அடே போக்கிரிப் பயல்களா! ஏண்டா பொய் சொல்கிறீர்கள் என்ருள் மயிலு.

வேலாயுத மூப்பனர் பிள்ளைகளைப் பார்த்து, விழுந்து விழுந்து சிரிக்கிருர், சரி, இருக்கட்டும் சாப்பிடுவம். பிறகு பேசுவம் என்று, பிள்ளைகளைத் தட்டிக்கொடுத்து களியை வாயிடம் கொண்டுபோகிருர்.

வேலாயுதம்! வேலாயுதம்!! என்று அதட்டும் குரல் வீதியில் கேட்டது; யார் அது என்று எதிர் பதில் கொடுத்தார் மூப்பனர்.

என்னடா முட்டாளா நீ! 5, 6 மாடுகள் பயிர்களை மேய்கின்றன; இங்கே விளையாடுகின்ருய் நீ! ஓடு! ஓடு சீக்கிரம் என்று பதில் எழுந்தது.

அறுவடையானது போக, இன்னும் 5, 6 நாள்களில் அறுவடைக்கிருக்கும் நிலத்தில், 5, 6 மாடுகள் இறங்கினல், என்னவாகும் நிலைமை என்பது எவர்க்கும் தெரியும்.

கையில் எடுத்த களியை அப்படியே உதறிவிட்டு எழுந்து, பேய் போல் ஓடினுர் மூப்பனர். பிள்ளைகளும் தாயும் திக்பிரமையடைந்தனர். அப்பா வந்த பின்தான் சாப்பிடுவம் என்ருர்கள் பிள்ளைகள். ஒன்றும் தோன்றவில்லை மயிலுக்கு. புறக்கடையில் இலையிட் டிருத்தலின், அவைகளையெல்லாம் அங்கேயே விட்டுவிட்டு வெளிவருவது எப்படி?

பாக்குக் கடிக்கும் நேரத்தில் சென்ற மூப்பனர் திரும்பினர்

என்ன செய்தி? இவ்வளவு விரைவில் திரும்பி விட்டீர்களே? என்ருள் மயிலு.

எண்ணமறிந்தே இளைப்பறிந்தே ஏழைஉய்யும்
வண்ணந் திருக்கருணை வையாய் பராபரமே.

பக்கத்து வீட்டுக்காரர், மாடுகளை விரட்டி ஓட்டி விட்டா ராம்; இரண்டு வீடு தாண்டுவதற்குள், எதிர் வந்த அவர் செய்தி யைச் சொன்னார் என்றார் மூப்பனார்.

சரி நீங்களும் சாப்பிடுங்கள் என்று, தாயைப் பிள்ளைகளு டன் அவசரப்படுத்தித் தானும் துரிதமாக உண்ண லானார்.

மார்படைக்க, விக்கலெடுக்க, கண் தெறிக்கும் அளவுக்கு ஏன் அப்படி அவசரமாக சாப்பிடுகிறீர்கள்! மெள்ள சாப்பிடுங் கள் என்றாள் மயிலு

உம்! உம்! நீங்களும் சாப்பிடுங்கள்! அவசரமாகப் போக வேண்டும் என்று, விரைந்து களியைத் தேனில் தொட்டு விழுங்குகிறார்.

அப்பா எங்கேயோ அழைத்துக் கொண்டு போகப்போகிறார் என்ற ஆர்வத்தில், பிள்ளைகளும் துரிதமாக உண்கிறார்கள்.

மயிலு! ஆகட்டும்! ஆகட்டும் என்று துரிதப் படுத்தி, அவளை யும் உண்பிக்கிறார்.

எங்கே இவ்வளவு அவசரம்?

பேசாதே, சீக்கிரம் ஆகட்டும்! பிறகு சொல்கிறேன் என்று கடிகிறார்.

இவ்வளவு தானா? வேறு இல்லையா?

இருக்கிறது இருக்கிறது; நீங்கள் மெதுவாக உட்கொள் ளுங்கள்; உங்கள் அவசரம் எனக்கு அச்சமா யிருக்கிறதே!

நீ பயப்படாதே! ஆகட்டும் ஆகட்டும் என்று மெல்லாமே களியை விழுங்குகிறார். ஒருவாறு இருக்கும் களியெல்லாம் உண்டு தீர்த்தாயிற்று. எழுந்து கையலம்பி வாயலம்பினார்.

பத்திரமா யிருங்கள்! பசியடங்கியது. வருகிறேன்!

எங்கே இந்நேரத்தில்? என்றாள் மயிலு.

வாக்குத் தவறலாமா? தவறினும், அதை நினைவில் வருவிக்க வேண் டாமா? நீ புத்திசாலி! இது உனக்கு மனதில் இருக்கட்டும்! எல்லாம் பிறகு

நாட்டாதே பென்னையொன்றில் நாட்டி யிதமகிதங்
காட்டாதே யெல்லாம் நீ கண்டாய் பராபரமே.

அறிவிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டே, விரைந்து வெளியேறினர் வேலாயுத மூப்பனர்.

கணவர் போக்கில் ஐயம் பிறந்தது. என்றும் இல்லாதபடி என்ன இந்த மாறுதல்? தொண்டையில் அடைத்துக் கொள்வதைக்கூட உணராமல், என்ன இப்படி விழுங்கினரே! போதாக் குறைக்கு, நீங்களும் ஆகட்டும், ஆகட்டும் என்று தூண்டி, நம்மையும் வெடுக் வெடுக் என்று ஒன்றும் பாதியுமாக விழுங்க வைத்தாரே! ஏன் இந்த அவசரம்?

நினைவு குழம்புகிறது. பிள்ளைகள் தாயை மருண்டு பார்க்கிருர்கள். சரி, நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள் என்று அவர்கட்குப் படுக்கை விரித்து, இரு குழந்தைகளையும் உறங்க வைத்தாள் மயிலு.

திடீர் என்று பிரவேசித்தார் மூப்பனர். வேர்த்து விறுவிறுத்து வந்த அவர் களைப்போடு காணப்படுகிருர்.

மயிலூ! ஏன் தாமதம்? கொண்டுவா களியை!

என்ன இது! இப்படி அவசரப் படுகிறீர்களே!

சீ பயித்தியம்! எவ்வளவு தூரம் ஓடிப்போய்த் திரும்பினேன். பசி காதடைக்கிறது; கொண்டுவா களியை!

என்ன! களியா? இப்போது தானே சாப்பிட்டீர்! மிஞ்சியதை வற்புறுத்தி,எங்களையும் துரிதப்படுத்தி சாப்பிட வைத்தீர்! களி யிருந்த பாத்திரத்தைத் துலக்கியும் வைத்து விட்டேனே என்றுள் விசயமொடு மனைவி.

நானு சாப்பிட்டேன்! என்ன விளையாடுகிருய்!

இல்லை; உங்களுக்கு ஏதோ இன்று மனம் குழம்பி யிருக்கிறது!

எனக்கா குழப்பம்? சரி; விளையாட்டு பிறகு. முன்னே களி கொண்டுவா; பிறகு எதையும் பேசுவம்; என்னுல் பசி பொறுக்க முடியவில்லை.

பிள்ளைகள் தூங்குகிருர்கள். இரைச்சலிட்டு அவர்களையும் எழுப்பி விடாதீர்கள்! நீங்களும் சிறிது கண்ணயர்ந்து காலையில்

உன்னை நினைந் துன்நிறைவின் உள்ளே உலாவும் என்னை
அன்னைவயிற் றின்னம் அடைக்காதே பராபரமே.

எழுந்தால், எல்லாம் தெளிவாய் விடும் என்று சொல்லியபடி, பாயை விரித்து தலையணையும் இட்டாள் மயிலு.

என்ன நாடகம் நடத்துகிறாய்?

இதோ பாருங்கள், சும்மா பேசாதிர்கள்! படுத்துக் கொள்ளுங்கள்;

பசி காதடைக்கிறது என்றால், படுத்துக் கொள்ளவா சொல்கிறாய்? களி தருகிறாயா இல்லையா என்று கடுந் துடிப்பொடு, விலமதிர கர்ஜித்தார் மூப்பனார்.

ஐயோ! உங்களுக்கு ஏதோ பயித்தியந்தான் பிடித்திருக்கிறது!

எனக்கா! எனக்கா பயித்தியம்??

இருக்கும் களியெல்லாம் தின்றுவிட்டு, மீட்டும் களி யென்றால் பயித்தியம் என்று சொல்லாது வேறு என்னதான் சொல்வதாம்?

நானா எல்லாவற்றையும் தின்றுவிட்டேன்? அடி பாவி! உன் பேய் வயிற்றில் அவ்வளவு களியும் எப்படிப் பிடித்ததடி! துரோகி!

ஐயோ! பயித்தியம்! பயித்தியம் தான் என் பதியைப் பற்றியிருக்கிறது. என்ன செய்வேன்; இதன் முடிவு என்ன வாகுமோ தெரியவில்லையே?

என்ன நாடகம்! தின்பதையும் தின்றுவிட்டு நான் தின்றேன் என்று பொய்யும் புகலத் துணிந்துவிட்டாய்! மோசக்காரி!

மாவு இருக்கிறது; வேறு களி கிளரித் தருகிறேன் என்றாள், கண்ணீர்ப் பெருக்குடன் மயிலு.

களியா! இனியும உன் கையிலா? சீ பிரஷ்டை!

ஐயோ! இந்தப் பயித்யம் உங்கட்கு வர யான் என்ன பாவம் செய்தேனோ?

இன்னுமா சாகஸம்! வாயை மூடு!

பரமுனக்கென் றெண்ணும் பழக்கமே மாறா
வரமெனக்குத் தந்தருள் என் வாழ்வே பராபரமே.

வார்த்தை தடித்து வளர்ந்தது. பின் கட்டிற்கு ஓடினர். அங்கிருந்த பிரம்பை எடுத்தார்; பேய் போல் சிலிர்த்து மயிலுவை நோக்கி வந்தார்.

குணம் பிறழ்ந்துளரே; என்ன செய்வது என்று குமுறியது மனம். உதற லெடுத்தது உடல்;ஒரு நாளும் இல்லாத அதிர்ச்சி: அடிவேகத்திற்கு அஞ்சி ஓடி, அடுத்த அறையுள் நுழைந்தாள். கதவைப் படீரென சாத்தி உள் தாள் இட்டாள்.

அவள் செயல், மூப்பனூர்க்கு ஆவேசத்தையே அளித்தது. இவ்வளவு ஜால வித்தை உனக்குத் தெரியும்என இதுவரையில் அறியேன். விட்டேனு உன்னை! மரியாதையாகக் கதவைத் திற! பிளந்துவிடுவேன் பிளந்து என்று சீறுகிறார். ஆத்திரம் பிறந்த போது, அறிவுதான் மங்கிப் போமோ!

குணக் கொண்டலே! யான் ஒரு பாவமும் அறியேனே! சத்குணரா யிருந்த என்பதியை இப்படித் தடுமாற விடுவது தகுவதேயோ?வதனூரம்ப தீர்த்தமுளாய்! கடற்கரையோரக் கருணுகரா! செந்திலாதிபா! தேவயானை மணவாளா என்று, நுழைந்த அறையிலிருந்து இதய வெளியானை ஏத்துகின்றுன் மயிலம்மை

திறக்கவில்லை கதவு என ஆத்திரமிக்க மூப்பனூர், ஒரு கனத்த கடப்பாரை எடுத்தார். வாசற் காலேயே இடித்துப் பெயர்க்கலானூர்.

ஹாம்! ஹாம்!! ஹாம்!!! என்ற உறுமுதல் பின்புறம் கேட்டது. வர வர வளர்ந்த அந்த ஹாங்காரம், பயங்கர நாதமாக இருந்தது. என்ன அது என்று திரும்பினர். என்ன வியப்பு!

உறங்கி யிருந்த மூன்று வயது குழந்தை எழுந்து, உடலை முறித்துக் கொண்டு துள்ளுகிறது. திடுக்கிட்டது மனம். சிந்தனை சேய் மேல் சென்றது. அடங்கியது கடுங்கோபம்; சேயை நெருங்கினர்.

அன்பனே வேலாயுதா! மறந்தனையடா என்னை! மறந்தனை என்று துடி துடிக்கிறது சேய்!

வந்தித்து நின்னை மறவாக் கடனுகச்
சிந்திக்க நின்னதருள் செய்யாய் பராபரமே.

அதன் குறிப்பு அச்சம் மிகுவிக்கிறது; இளஞ் சேய்மேல் ஆவேசித்த தாங்கள் யார் என்று தெரியவில்லையே என்று, கை கூப்பித் தொழுகிறார் மூப்பனார்.

மாதந்தோறும் மூன்றுதரம் வந்து வழிபட்ட அன்பனடா நீ! கேழ்வரகு விளைந்தால், களியொடு தேன் கலந்து நிவேதிப்பேன் என்றாய்; விளைந்த பின் என்னை மறந்தாய்;திறந்த இதயம் மறந்ததெனில், வினை விளைவு நிகழும்; அதன் மூலம் பிறப்புத் துன்பம் பெரிது தொடரும்; என் அன்பன் உனக்கு அது நிகழாதபடி குறுக்கிடுவது, என் கடன்.

அதனால், உன் உருவில் வந்தேன்; உன்னைக் குரல் கொடுத்து ஓட்டினேன். என்னை என்றும் எண்ணும் உனது தேவி கையால் களியமுது கொண்டேன். உன் வாக்கை நிறைவேற வைத்தேன். அதனால் களி மிகுத்தது என் உள்ளம். அன்பிற் சிறந்த மனையாள் மனத்தை இன்னம் நோகச் செய்யாதே! யான் வருகிறேன் என்று ஆவேசம் மலையேறியது.

திக்பிரமை யடைந்த மூப்பனார் உள்ளம், படக் படக்கென்று அடித்துக் கொள்கிறது. ஆறுபோல் கண்கள் நீரைப் பெருக்கின. விம்மிப் பொருமுகிறார் மூப்பனார்.

மையுண்ட கண்ணாள் என் மனையாள்; மழலை மொழியாளர் என் மக்கள். இவர்பால் வைத்த மயலால், கனிந்து உன்னை யெண்ணும் கருத்தொழிந்தேன் எந்தாய்! என் பிழைக்கு இரங்கி, களியமுதை யேற்று, எளியேன் வாக்கை நிறைவேற்றிய நின் கருணையை என்னென்று ஏத்துவேன் எம்பிரான்! வான் வழங்கும் உதவிக்கு ஈடுசெய வையகத்தா லாமோ? அதுபோல், உனது அருட்கொடைக்கு ஈடுசெய்வார் இல்லை ஐயா இல்லை, யென்று அலறுகிறார்.

ஆவேசம் அதிர்ச்சி செய்தபோதே,மயிலம்மை தான் திறந்து வெளிவந்தாள்; அனைத்தும் கேட்டாள்.

செந்திலாதிபா! அப்படியா செய்தி? என்பதி யுருவில் வந்தது நீயா? என் புன் கையால் தந்த களி, உனக்குப் புத்தமுதம் ஆய

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே.

துவோ? பிரபோ என்று பொருமிப் பொருமி, மோதிவரு கண்ணீரில் மூழ்குகிறாள்.

மயிலூர்! நீயே பாக்யவதி! கந்தப் பெருமானைச் சேவித்தாய்! நீ யளித்த எளிய களியை எம்பெருமான் ஏற்றான். உத்தமி யான உனது வயிற்றில் பத்துத் திங்கள் தங்கிய பயனால், உனது பாலன்மேல் பரமன் ஆவிர்ப்பவித்தான். உன்னைத் தேவியாகப் பெற்ற என் ஜன்மம் கடைத்தேறியது. உனது அருமை யறியாது சினந்த என்னை மன்னிப்பாயா என்று கண்ணீர் பெருக்கிக் கதறுகிறார் மூப்பனார்,

ஆவேசம் மலையேறிய சிறிது நேரத்தில், அன்னையை இளஞ்சேய் அணுகியது. ஐந்து வயது மகவும், தந்தை பக்கம் சார்ந்தது.

குடும்பத்தோடு மூப்பனார் அப்போதே புறப்பட்டுத் திருச்செந்திலை யடைந்தார். ஆறுமுகப் பெருமானை அங்கிருந்தே பல நாள் ஆராதித்தார். அதன் பின் ஊர் திரும்பினார். தாமரை யிலை நீர் போல், இல்லற வாழ்க்கை சில நாள் இனிது நடந்தது.

மயிலம்மை, மக்களுடன் நாள் தவறாமல் கோயிலுக்குச் சென்று, குமரனைக் கும்பிட்டு வரலானாள்.

மூப்பனார் புறமுக விழிகளை அகமுக மாக்கினார். உள்ளேயே பார்வையை ஊன்றினார். உமையாள் குமரனை உளத்தே கண்டார்; காதல் கொண்டார்.

உன் பேரைப் பிதற்றுவதை நீங்கேன்! திருச்செந்தில் தேவா! உனது பெருமை பேசுவதை ஒழியேன்! அருங்கன்று தாயை விளிப்பது போல், அத்தா நின்னை யழைக்கின்றேன்; பொருட் செல்வம் வேண்டா; அருட் செல்வம் நீ தா! புவிச் செல்வம் வேண்டா; தவச்செல்வம் நீ தா! ஊன செல்வம் வேண்டா; ஞான செல்வம் நீ தா! என்று இடையறாது வேண்டுகிறது உணர்வு.

நாள்கள் இங்ஙனம் பல நடந்தன.

ஒருநாள், மேலிருந்து இறங்கிய ஒரு தெய்வ ஒளி, அவர் இதய வெளியுள் புகுந்தது.

---

* வெட்டவெளிப் பேதையன்யான் வேறுகா டொன்றறியேன்
சிட்டருடன் சேர் அனந்த தெண்டம் பராபரமே

வேல்! வேல்!! திருச்செந்தூர் வேல்!!! வேலாயுதா என்று வாய் மலர்ந்தபடி, அவரது அருமை ஆன்மா, ஆறுமுகப் பெருமான் அடிமலர் நிழலை யடைந்தது!

புன்செய்ப்பயிர் விளையாவிடிற் புத்தக்களி நிளதர்ம்
என்செய்ப்பய னெய்திக்களி யினிதாஅயில் காலே
என்செய்தனை யெனதக்களி யென்றுண்டிடு பின்னர்
மன்செய்ம்மனை யுயவேவரு மணியேயெனை மறவேல்

என்று இவ்வரலாற்றை இன்றும் பாடுகிறது தமிழகம்!

எங்கே காணலாம்

(K. S. சுந்தரமூர்த்தி, புவனகிரி)

சென்னைக்கு ஒருவன் செல்வதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன. நடந்து சென்றவனும் சென்னையைக் காண்கிறான். மற்றும் பலவகையான வேறு கருவிகளிலே சென்றவனும் சென்னையை அடைகிறான். ஆனால் சென்னை சென்றவர்கள் கூறுவதில் எது நமக்கு எளிதாகப் படுகிறதோ அந்த வழியைப் பின்பற்றி சென்னையை நாடிச் செல்லுகிறோம்.

சென்னையை நாடிச் செல்லும் ஒருவன்போல், ஆண்டவனைக் காண ஆவல் கொண்டு அவனை அடைய விரும்பும் அவனது அடியார்களும் உண்டு. கன்னியர் உள்ளம் கணவனை நாடி விரைவதுபோல், கங்கையானது கடலை நாடி ஓடுவது போல், ஆண்டவனைக் காணவேண்டுமென்று அழியாத காதல் கொண்ட அடியவர் என்ன செய்வது? எவரிடம் போய் வழி கேட்பது? அன்றியும், சென்னைக்குச் சென்று வழி தெரிந்தவர் போன்று, ஆண்டவனைக் கண்டவர்கள், வழியறிந்தவர்கள் யாராவது உள்ளனரா வென்று நாம் நினைக்கிறோம்!

நாம் நினைத்தபடியே ஆண்டவனைக் கண்ட ஆன்றோர்கள், அவர்களுக்கு பிறகு வரும் அவர்களைப் போன்றவர்களுக்கு

இரவுபக லற்றவிடத் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே.

வழிகாட்டியாக, தாம் சென்ற, எளியதானதென்று தமக்குப்பட்ட உண்மைகளை விளக்கிச் சென்றனர்.

ஆண்டவனை அடைய விரும்பிய, விரும்பி யடைந்த ஆன்றோர்களெல்லாம் பார்க்கப் போனால், அன்பையே தாரகமாகக் கொண்டுதான் இறைவனை யடைந்தனரென்று தெரிய வருகிறது. அவர்களுடைய வாழ்வை நாம் தூய கண்ணாடியிலே காணும் போது, ஒவ்வொரு அடியாரும் அன்பு விளக்கமாகவே காட்சி யளிப்பர். ஒவ்வொருவரும் உண்மையில் அன்றும், இன்றும், இனியென்றும் இருக்கக்கூடிய அந்த ஒருவனை, அன்பினில் விளைந்த ஆரமுதாகத்தான் கருதினார்கள் என்று நமக்குத் தெரிய வரும். ஆனால் அவர்கள் வாழ்விலே சில மாறுதல்கள் காண்கிறோம்! அவையென்ன?

அதுதான் அவர்கள் ஆண்டவனை எந்த வழியில் சென்று அடைந்தனர் என்பது. ஆழ்வாராதிகளிலே பெரியாழ்வார் என்பவா, கண்ணனைக் கண்மணிப் பிள்ளைபோல "அன்பு" செய்து அந்த கண்ணனைக் கண்டார். திருமங்கை ஆழ்வார் திருமாலைத் தலைவனாகக் கொண்டு "அன்பு" செய்து அவனைக் கண்டார். குலசேகரப் பெருமான் வைத்தியனை நம்பும் நோயாளி போன்றும், தாயை நம்பும் சேய் போலும், "அன்பு" செய்து இறைவனை யடைந்தனர். இதைப்போலவே நாயன்மார்களிலே பார்த்தால், குறிப்பாக நால்வரைப் பற்றி நாம் நினைக்கும்போது, அவர்கள் ஆண்டவனை அடைய விரும்பிச் சென்ற வழிகளிலேயும் மாறுதல்கள் காண்கின்றன.

அவர்களில், ஆண்டவனாலேயே "என்னப்பன் என்னைப் பாடினான்" என்று சொல்லப்பட்ட அப்பரடிகள், ஆண்டவனை ஆண்டான் போன்றும், தான் அவனுடைய அடிமை போன்றும், அடிமைக்கு ஆண்டானிடத்தில் இருக்கும் பயபக்திபோல், தானும், தன்னுடைய ஆண்டானிடத்தில் "அன்பு" செலுத்தி தன்னையே அவன் உண்ணும்படியான அரும் பேறு பெற்றனர்.

எப்பொருளும் நீயெனவே எண்ணிநான் நோன்ருத
வைப்பைஅழி யாதிலைபா வையாய் பராபரமே.

அடுத்து வந்த **காழிவேந்தர்** இறைவனைத் தந்தையாகவும், தான் தனயனாகவும் முறைகொண்டு, தந்தையினிடத்தில் பிள்ளைக் கிருக்கும் "அன்பு" போல, தான் இறைவனைப் பாவித்து "அன்பு" செலுத்தி இன்ப வாழ்வு பெற்றனர்.

"**இன்றொண்டர்**" என்று இராமலிங்க அடிகளால் இனிது அழைக்கப்பட்ட **வன்றொண்டர்**, இறைவனை தனக்குத் தோழனாகப் பெற்றார். இறைவனை தான் தோழமை கொண்டு "அன்பு" செலுத்தி, அயனும் அரியும் அளப்பரிய ஆலமுண்ட அண்ணலின் அருளுக்குப் பாத்திரமானார்.

ஆனால் இம்மூன்று நாயன்மார்களைவிட, இவர்கள் இறைவனைச் சார்ந்த வழியைவிட, மணிவாசகர் இறைவனை எந்த முறையில் "அன்பு" செலுத்தி இறைவனைச் சார்ந்தார் என்பது தான், இங்கு நாம் முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டிய விஷயம்.

அப்பர் இறைவனைச் சார்ந்து இன்பமடைந்த வழி, நம்போல் வார்க்கு இனிது சாலச் சிறந்தது. அது ஆண்டவனிடத்தில் அபரிமிதமான "அன்பு" வருவதற்கு மிகவும் அனுகூலமானது.

ஆண்டவனிடத்தில் அப்பர் வைத்த அன்பு மார்க்கத்திற்கும்—, ஆளுடைப் பிள்ளை வைத்த அன்புக்கும் வித்தியாசம் உண்டு. ஆண்டானிடத்தில் அடிமைக்கு இருக்கும் "தொடர்பை" விட, தந்தையினிடத்தில் மகனுக்கிருக்கும் "தொடர்பு" உயர்ந்தது என்று கூறலாம். இந்த இரண்டையும் விட வன்றொண்டர் கொண்ட அன்பு சிறந்தது. எப்படி?

ஆண்டானிடத்தில் அடிமைக்கிருக்கும் தொடர்பைவிட, தந்தையினிடத்தில் தனயனுக்கு இருக்கும் தொடர்பு கொஞ்சம் நெருக்கமானது. ஆனால் அதைவிட நெருக்கமானது "தோழமை" யென்பது. நண்பரிடத்தில் யாதும் வெளிப்படையாகச் சொல்லி, தனது குறையை தீர்த்துக் கொள்ளலாம். இதற்கு சுந்தரர் பரவை மனைக்குப் பரமனை தூது செல்லும்படி வேண்டிக் கொண்டதும், சங்கிலியை மணம்புரிய விரும்பி வேண்டியதிலிருந்தும்,

---

சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென்
றெம்மா லறிதற் கெளிதோ பராபரமே.

உரிமையோடு தாம் குண்டையூரில் பெற்ற நெல்லையெலாம் தனது ஊருக்கு கொண்டுவந்து சேர்ப்பிக்குமாறு கூறுவதிலிருந் தும் தெரிய வருகிறது. மற்றும் இவை யெல்லாவற்றையும் விட இன்னும் அதிக உரிமையுள்ள "அன்பு" வழியும் உண்டு. அது என்ன வழி?

இறைவனைத் தலைவனாகவும் தன்னை தலைவியாகவும் பாவித்து அன்பு செலுத்துவது (நாயக, நாயகி பாவம்). இந்த வழியைத் தான் ஆழ்வாராதிகளிலே ஆண்டாளும், நம்மாழ்வாரும், நாயன் மார்களிலே மணிவாசகரும் பின்பற்றியது.

இன்று இறை நலமிக்க குற்றமற்ற அன்பர்கள் நெஞ்சில் வற்றாத இன்பவூற்றாகப் பெருக்கெடுத்தோடும்படி இனிமையான அருட்பாவை வழங்கிய வள்ளல் இராமலிங்க அடிகள் வாழ் விலும் காட்சியளிப்பது.

இதுவரையில் நான் உங்களுக்குக் கூறிவந்ததெல்லாம், இனி வரும் இன்ப வாழ்வின் எதிரொலியே! ஆகையால் இன்று நாம் செய்ய வேண்டியது என்ன?

எந்த வழியில் யார் யார் நின்று வணங்குகின்றனரோ, எந்த எந்த வடிவாக நினைத்து வணங்குகின்றனரோ, என்ன என்ன நினைந்து வணங்குகின்றனரோ, அவரவர்களுக்கு அவரர் கள் எண்ணியவாறு தோன்றி அவரவர்கள் விரும்பியதை அருளு கிறேன் என்று கீதையில் பகவான் கூறுகிறார்.

எத்தனை ஜீவராசிகள் உண்டோ? அத்தனை வழிகள் உள்ளன அவனைக் காண்பதற்கு. அவனைக் காண வேண்டுமானால் தூய அன்பு வேண்டும். ஆண்டவன் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை. ஆண்டவன் அன்பெனும் குடில்புகும் அரசு. ஆண்டவன் அன்பெனும் வலைக்குட் படுபரம்பொருள். ஆண்டவன் அன் பெனும் கரத்தமர் அமுது. ஆண்டவன் அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடல். ஆண்டவன் அன்பெனும் உயிர் ஒளிர் அறிவு. ஆண்டவன் அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியென் பார் இராமலிங்க அடிகள். அன்பின் வழியது உயர்நிலை என்

வித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே.'

பார் செந்நாப் புலவர்; அன்பின் வழி அவன் வழி. அன்புடைய கண்ணப்பனல்லவா தொண்டு செய்து ஆறு தினங்களில் காளத்தியப்பரால், நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என்ற சொல்லுக்கு உரியவனுனன். உண்மை அன்பின் லக்ஷணம்என்ன?

நமது வடிவம் நம்பன் பக்கல் அன்பாகத் திகழ வேண்டும். நமது அறிவு நஞ்சுண்ட பெரியனை அறியும் அறிவாக அமைய வேண்டும்; நமது செயலெல்லாம் நாரிபாகனுக்கு இனியனவாக இருக்கவேண்டும். இதுவே சேக்கிழார் கூறும் இனிய நன்மொழியாகும். அன்பின் லக்ஷணமும் இதுவேயாகும.

இறைவனை வந்திக்கும் ஒரு நெறியையும், இறைவனையே அறியாத தன்மையையும், இறைவனை அறியும் அறிவை அறியாத தனது அறியாமையையும் தாம் பெற்றிருப்பதாகவும், அத்தகைய தன்னை, மறிவறியாச் செல்வம் நினது அருள்பொழியும் திருவடியின்கீழ், பிறிவறியா அன்பர் வந்து பெற்றாரல்லவா! அந்த திருவடிக்கு யான் அடைக்கலம் புகுவதற்கு ஆசையுள்ளேன். இறைவா எனக்கு அடைக்கலம் தாவென்று வேண்டுகின்ற மணிவாசகரின் அருமைத் திருவாக்கை உன்னுக.

இந்த விருப்பம் கொண்ட மணிவாசகர், செத்திடமும், பிறந்திடமும், இனிச் சாவாது இருந்திடமும் இத்தனையும் அறியாதபடி, மற்றதை அறியும் அறிவைக் கொண்டவர் அறிவு என்ன அறிவோவென்று, நம்மை விளித்துக் கூறுவதையும் சிந்திக்கும் போது உண்மை விளங்குகிறதல்லவா?

அது சரி. அன்பு உடையவனுக ஆவது எப்படி? அதைச் சொல்லும். அன்பு தூய உள்ளம் இன்றி துலங்காது. நல்ல உள்ளம் வேண்டும். நல்ல உள்ளம் வேண்டுமானுல் நல்ல உடம்பு வேண்டும். நோயுற்ற உடம்பு பேயுற்றதையும். நல்ல உள்ளமே இறைவன் கோயில்.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்"

ஈசன் திறமே பேணிக் கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே காணலாம், இருவர் அறியா ஒருவனை என்பார் வாகீசர்.

**ஆங்கார மற்றுன் அறிவான அன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே.**

" உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

என்பது திருமந்திரம்.

இவற்றை ஒருங்கே உன்னுக.

இறைவன் இருக்கும் இடம் சுத்தமாக வல்லவா இருத்தல் வேண்டும்? பொருமையும், ஆசையும், சினமும், கடுஞ் சொல் லுமா சூழ்ந்திருக்க வேண்டும்? கரவாடும் வன்னெஞ்சுடைய நாம், கரவார்பால் விரவாடும் பெருமானைக் காண்பது எப்படி? அசுத்த குட்டையை அருந்தும் தண்ணீருடையதாகச் செய்வது எப்படி? பேதுற்றலையும் நெஞ்சை, சேதமுறுது ஆக்குவதெப்படி? இதற்கு என்ன செய்வது? நீர் சொல்லும்?

குற்றமகன்ற யோகர் மனக் குகையில் குடி இருப்பவன் ஆதலால்தானே குகன் என்ற பெயர் வந்தது முருகனுக்கு.

" கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழும்
குருவே சண்முகங் கொண்ட கோவே" (திரு அருட்பா)

என்ற விசாரணையானது, இப்பொழுது நம்மிடத்தே படலம் படலமாகத்தோன்றிக் கொண்டு வருகிறதென்று தெரிகிறது. புத்தி தெளிகிறது. இந்த நேரத்திலேதான் நான் சொல்ல வந்ததைச் சொல்லவும் வேண்டும்.

உயிர் உண்மை அனுபவம் பெற உள்ளம் பொய்யாது ஒழுக வேண்டும். உள்ளம் பொய்யாது ஒழுக வேண்டுமானல், உடல் நலத்தோடு திகழ வேண்டும். நோயற்ற வாழ்வில் வாழவேண்டும். நோயுள்ள உடம்பை யுள்ளவன் மனது தீமை யுடையனவாகத் தான் இருக்கும். ஆகையால் உடல் நலம் பெற சத்தான உணவு உட்செல்ல வேண்டும். உண்ட உணவு, உளளத்தைச் சீர்படுத்தும் உணவாக இருத்தல் வேண்டும. காரமுள்ள உணவு சாரமற்ற தென்று தெரியவேண்டும். கோரமுள்ளவனுகச் செய்வதும், இக் காரமுள்ள உணவுதான் என்று தெரிய வேண்டும். சத்துவ குணத்தைத் தருகின்ற உணவு சத்துவ குணத்தையுடையதே.

சிந்தை அவிழ்ந்தவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே
வந்தவர்க்கே இன்பநிலை வாய்க்கும் பராபரமே.

இதனால் இந்த உணவை உட்கொண்டவன் சத்துவ குணமுடையவனாகத் திகழ்வான். நல்ல உணவு, நல்ல உடம்பையும் அதனால் நல்ல உள்ளத்தையும் பெற உதவும். நல்ல உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் இயற்கையாகவே எழும். அந்த எண்ணம் எண்ணினால் திண்ணமாக முடியும். இதற்கு நம்மிடையே இருந்து இன்று உலகத்தார் உள்ளத்திலே யெல்லாம் உள்ள "காந்தியே" நமக்கும் வழிகாட்டியாவார்.

அன்று காகத்தை உவமை காட்டி, சிவ போகத்தைப் புசிப்பதற்குக் கூவியழைத்தார் உலகோரை, "தவராஜயோகி" தாயுமானவர்.

இன்று இறைவனைக் காண ஆவல் கொள்ளும் நம்மவர்க்கு நான் கூறும் வழி? இறைவனிடத்தில் நமக்கு அன்பு தூய்மையோடு இருக்க நான் கூறும் வழி? தன்னையடுத்தவர்கள் எல்லாம் "சுகம்" பெறுதல் வேண்டுமென்ற வள்ளலாரின் உள்ளம் கொண்டு நம்மவர்க்கு இவ்வெளியேன் கூறும் வழி? என்ன தெரியுமா? அதுதான் யோக வழி !!!

குறிப்பு:—யோகம் என்றால் கூடுதல் என்று பொருள். இங்கு நாம் கூடுவதும் "யோக" வழியிலே யென்று அறியவும். இதுவே இறைவனைக் காண விரும்புவோர்க்கு "ஏக" வழியாகும்.

"அன்புடையார் எல்லா முடையா ரென்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ சேர வாருஞ் செகத்தீர்—!

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உணரலாம் உத்தமன் உள்ளத்தில் உள்ளதை.

சொல்லாடா ஊமரைப்போற் சொல்லிறந்து நீயாகின்
அல்லால் எனக்குமுத்தி ஆமோ பாரபரமே

பக்தியும் இசையும்

(கீழ்வேளூர் - மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)

16-வது கர்த்தா ராகம்.

ராகம் : சக்ரவாஹம்.

தாளம் : திஸ்ரஜாதி. த்ருபுடை

மத்யமகால நடை உடையது.

முக்காலிடத்தில் ஆரம்பம்.

இந்த ராகமானது, ஸம்பூர்த்தியான ஏழு ஸ்வரங்களையும் உடையது. ஷட்ஜம், சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம, பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைவஷிகி நிஷாதம், ஷட்ஜம் - இது போன்றே அவரோஹணத்திலும் வரும்.

இந்த ராகம் ஸம்பூர்த்தியாக எல்லாச் சுரங்களும் வந்தபோதிலும், மத்யமகால வோட்ட நடையிலேயே தான் ராகம் தொழிற்படும். அப்போதுதான் ராகச் சாயை நன்கு தொனிக்க முடியும். மற்றும் எல்லாச் சுரங்களும் கமக, வரிக, ரக்திமை உடையதாக இருந்த போதிலும், சுத்த, ரிஷப, கைவஷிகி நிஷாதங்கள்தான், ராக பாவ உணர்ச்சியைத் தெற்றென எடுத்துக் காட்டி பாவத்தை நன்கு உணர்த்தும்.

ஆரோஹணம் : ஸ ரி க ம ப த நி ஸ்

அவரோஹணம் : ஸ் நி த ப ம க ரி ஸ.

சக்ரவாஹ ராக தத்துவ பாவ உணர்ச்சிச் செயலின் பொருள், ஒருவன் தான் இது வரையும் செய்த தவறுகளை

காட்ட அருள்இருக்கக் காணு திருள்மலத்து
நாட்ட மெனக்கு வரல் நன்றோ பராபரமே.

சுகத்திலேயே காலத்தைக் கழித்துத் திரிந்து அலைந்தவனுயிற்றே; (புட்டு லோபுலனு) பிறவியிலேயே தர்ம சிந்தனை இல்லாத லோபத்வ குணமுடையவர்களை; (பொட்டகை பொசடிதி) என்னுடைய இந்த வயிற்றை நிரப்புவதற்காக என்னென்னவோ இந்திரன், சந்திரன், குபேரன் தாதா என்றெல்லாம் புகழ்ந்து, அந்த லோபிகளின் பொருளைக் கொண்டு எனது வயிற்றை நிரப்பி வாழ்ந்தவனுயிற்றே; (துஷ்டுலதோகூடி) மற்றும் செய்யத் தகாத காரியங்களைச் செய்து துஷ்டர்களாக உள்ள துன்மார்க்கர்களோடு சேர்ந்து; (துஷ்க்ருத்யமுலு ஸல்பி) கெட்ட காரியங்களைச் செய்து; (நட்டுபடினத்யாக ராஜுனி) அல்லலில் அகப்பட்டுத் தவிக்கும் இந்த த்யாக ராஜனை; (தயதோ எடுலப்ரோத்துவோ தெலியதே) நீ எப்படித்தான் கருணை வைத்துக் காப்பாற்றி யருளப் போகின்றாயோ தெரியவில்லையே என்று, ஸ்ரீ த்யாக ப்ரும்மம் தானே உணர்ந்து தன்னுடைய செய்கைகளை எண்ணி எண்ணி விசாரப் பட்டு முறையிட்டுக் கொள்ளுகிறார், ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் பெருங் கருணையை வியந்து.

கருத்துள்ளுரை

இந்தக் கீர்த்தனத்தின் வாயிலாக த்யாகப்ரும்மம், மனிதப் பிறவியை அடைந்தவன் இப்படி இப்படி யெல்லாம் நடந்துகொண்டு தனது அரிதான மனிதப் பிறவியைப் பாவனப்படுத்திக்கொள்ள வேணுமென்று உபதேசிக்கிறார்.

மதம் பிடித்த ஆண் மாட்டினைப் போல் எப்போதும் காமாந்தகாரனுய் இல்லாமலும், தன்னுடைய வயிற்றை வளர்ப்பதற்காக வேண்டி நன் மார்க்கத்தில் பொருளீட்

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ அன்றே பராபரமே.

டாதவனும், பிறவியிலேயே லோபத்வ குணமுடையவனு மும் உள்ள அதர்மனைப் புகழ்ந்து பேசி, அவனால் அளிக்கப் படும் பொருளைக் கொண்டு வயிற்றை வளர்க்க என்னாமை லும், மற்றும் பாப காரியங்களையே செய்துகொண் டிருக்கிற துஷ்டர்களோடு சேராமலும், நன் மார்க்கத் தையே கடைப் பிடித்தவனாக இருந்து தனது மனிதப் பிறவியை பாவனமுறச் செய்ய வேண்டும் என்று உபதேசிக்கிறார்.

மற்றும் இம்மாதிரியெல்லாம் தன் மனிதப் பிறவியைப் பாவனமுறச் செய்துகொள்ள நினைவில்லா திருக்கும் மனிதனை, இறைவன் ஒரு நாளும் காப்பாற்ற நினைவில்லாத வனாக இருந்துவிடுவான் என்று, தன்னையே இதனிற்கு இலக்காக வைத்துக்கொண்டு, இம்மாதிரி நடந்து திரியும் மாந்தர்களைப் பார்த்து மிகவும் வருந்தி, இவர்களைப் பார்த்துப் பார்த்து இவர்களின் செயலை எண்ணி எண்ணி, இந்தக் கூட்டத்தினர்களை நீ எப்படிக் காப்பாற்றப் போகிறாய் ஐயனே என்று விசாரப்பட்டு வேண்டிக் கொள்கிறார்.

மற்றும் இப்படிப் பட்டவர்களைக் காப்பாற்றும் சித்தம் உனக்கு இருக்குமாயின், அது உனது பெருங்கருணையின் திறத்தை உணர்த்துமே யல்லாமல், இவர்களின் இந்த செயல் எவ்விதத்திலும் மன்னிக்க முடியாததே யாகும் ஐயனே என்று, இம்மாதிரியான மனிதர்களைக் கண்டு வருந்துகிறார் த்யாகப்ரும்மம்.

தாள, கால, கதி, இட, இலக்கண, தத்துவப்பொருள்: இந்த விஷயத்தை திஸ்ரமும், சதுஸ்ரமும், கலந்த இரு

* அனைத்துமாய் நின்றுயே யான்வேறே நின்னை நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் பராபரமே.

ஜாதி தாளத்தில் இவர்களின் செயல் இப்படி அரு வருக்கத் தகுந்ததாக இருப்பதை வலியுறுத்தி, மேலும் மூக்காலிட மென்கிற இடத்தின் குணத்தால் இடித்துப் பேசி இறைவனின் பெருங் கருணையான, கருணை ரஸ குணத்தை வியந்து பேச. சதுஸ்ர கதியாகிய சத்துவக் குணப் பண்பு நிலைமையில் தெரிவித்து, இயல், இசை, தாள, கால, கதி, இட, இலக்கண தத்துவப் பொருள் விளங்க மேலே சொல்லப்பட்ட விஷயத்தை தனது மனப் பாவம் விளங்க, பல தரம் பல பேர்களால் சொல்லப் பட்டும், கேட்காத மாந்தர் கூட்டத்திற்கு மிகவும் இடித்து, வன்மையாக நடுநிலைமையான மத்யமகால நிலைமையில் உபதேசித்துள்ளார் த்யாகப்ரும்மம் என்க.

Memory and intuition

Memory is a dry well. What all man has learnt, seen or experienced is thrown into it. They can be recalled, remembered and described. When your memory fails you, whatever you cannot remember or recollect is lost for you. Memory is a storehouse of cold rice. It is like a gramaphone. Whatever is entrusted to it, it will reproduce in the form in which it was given. Memory is but an insignificant pocket of your mind, with more leakages than you wish. Intuition or inspiration is another part of the mind—a most invaluable part. This is an artesian well. From the depths of your soul, some ideas, thoughts, expressions, and feelings are thrown up into your consciousness and understanding. You might have heard of some of them, perhaps you have forgotten them altogether.

Perhaps you never before entertained them even for a short time. Still they well up. This welling up of great ideas and expressions and experiences is the result of inspiration or intuition. To get back into your recollection past experiences and ideas entertained by you before, you can make an effort to bring back from your memory. You cannot do this with intuition. Memory acts well only when you are fully conscious of yourself and the world without. Where your consciousness gets dim and blurred, your memory refuses to work well; with its loss, memory is lost. For intuition or inspiration, self-forgetfulness is an indispensable requirement. Memory is an obstruction to the inspired outpouring of the soul. Memory may be an aid and a good aid, where it holds back and aids the outflow. But not infrequenty memory-tablets of the mind shut up the outflow of the spirit into your understanding. Filled in the thought of God, wet in his meditation, man forgets himself. In the forgetfulness of the lower self, the illumination of the spirit gushes forth with many great truths and they rush into your understanding as if they are messages from an unknown and unknowable world. The understanding catches the messages from the Lord within; this is true inspiration. Inspirational pœsy is the message of the Lord within to the man without. In the truest sense they are God-spoken.

The great Sankaracharya stood before the Lord of Tiruchendur. He forgot himself and in forgetting himself he forgot his learning. Memory was closed. He describes how his pœm of Shanmuga Bhujangam burst forth in beautiful verse. Devotion to God, beauty and truth is a great aid to touch the springs of artesian intuition. Even so,

the Thevarams, the Prabhandams, the Tiruppugazh Songs and many a piece of exquisite pœsy are but what was brought forth by the ecstacy of human experience. The muse wells forth in the true emotional realisation of the Lord in creation. The great Arunagirinathar hence advised that man should forget what he has not learnt to forget, that is, the world and desires connected with it. He also advised that man should remember what he has forgotten, his soul within, the Lord within. The out-pourings of the Tamil Saints are the Expression of that ecstatic joy born out of the forgetfulness of the lower self and its world attractions and the deep everlasting remembrance of the Lord within. The Conhciousness of the immanence of the Lord within and the ever prayerful approach to Him seated within, fills the conscious being of man with divine qualities and powers which are the attributes of the Lord that dwells within every soul. Memorise to forget yourself. The flood of inspirational ecstacy will flush your soul and understanding, carrying with it Gnana-the universal, the Muse of melody and the spirit of pœsy. May the Lord please that I learn to forget myself, so to get dissolved in his eternal flood of Ananda.

(Thiruppugal Mani)

சென்னை தொண்டர் குழாம் திருவருணை யாத்திரை 29-9-52 திங்கட்கிழமை இரவு புறப்பட்டு 1-10-'52 புதன்கிழமை காலை சென்னை திரும்பும். 30-9-52 செவ்வாய்க்கிழமை திருவண்ணாமலையில் பஜனை, இறைவழிபாடு நடைபெறும்.

311

"விதியை யும்விதித் தென்னை விதித்திட்ட
மதியை யும்விதித் தம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருள்
கதியை எப்படிக் கண்டு களிப்பதே."

(தாயுமான சுவாமிகள்)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR :: MADRAS-90

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஊதுபத்தி
நெ.1506

312

ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்
நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.
ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஓர்க்ஸ்
புரொப்ரைட்டர் :
சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்
"ஸ்வர்ண மாளிகை"
A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel:—"FAITH' Estd :—1924 Phone :—113

வியாபாரககுறி
N. K. M.
தங்கநாடா
நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53, கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by